

# ரமணோதயம்

ஜூலை 2021
காலாண்டு

அருணை விஜய இதழ்
விலை ₹ 20



**ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்**

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள்
தயவுசெய்து தங்களது சந்தாவைப்
புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச்
செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக்
கொள்கிறோம்

உதயம் 20 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 4

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அருணை விஜய இதழ்

ஜூலை 2021

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

*அருணை விஜய இதழ், ஜூலை 2021*

| வ.எண் | பொருள் | ப.எண் |
|---|---|---|


| | | | |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | ஔவைக் குறள் | ராம் மோஹன் | 22 |
| 3 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 27 |
| 4 | அழகன்னை அன்பினில் கரைந்தாள் | ரவி&ஸ்ரீதர் | 33 |
| 5 | அழகன்னை அன்பினில் கரைந்தாள் (பாடல்) | மணவாசி ராமஸ்வாமி ஐயர் | 41 |
| 6 | கூப்பிடும் தூரத்தில் குரு ரமணர் | பிர. கிரிதர ஜெகதீஷ் | 42 |
| 7 | இனிவரும் திருநாட்கள் | | 49 |
| 8 | பரமனின் பல்வேறு பரிமாணங்கள் | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 50 |
| 9 | முருகனார் நோக்கில் முழுமுதற் கடவுள் | ரமண சுந்தர்ராஜன் | 61 |
| 10 | செய்திகள் | | 72 |

# ஆசிரியர் உரை

## பதஞ்சலி காட்டும் பகவான்

*சாதுஓம் சுவாமிகள் சாதனையின் பரிணாமத்தை ஐந்து வகுப்புகள் உள்ள ஒரு பள்ளிக்கு ஒப்பிடுகிறார். ஐந்து வகுப்புகள் இருந்தாலும் ஆசிரியர் மட்டும் ஒருவரே! அந்தப் பள்ளியின் நோக்கம், மனிதனை ஆத்மசாட்சாத்காரம் பெறத் தகுதியாகத் தூய்மைப் படுத்துவதே. முதல் வகுப்பில் சேர்ந்த மாணவன் முதலில் கர்ம காண்டம் தொடர்பான நூல்களையும் சாஸ்திரங்களையும் படித்து, தான் கர்மங்களை இடையறாது செய்தால் மட்டுமே போதும். கடவுளின் துணை அவசியமில்லை என்று எண்ணுகிறான். (இதுவே பகவான் உபதேச உந்தியாரின் உபோத்காதத்தில் ஞான மார்க்கத்தின் பின்னணியாக எடுத்துரைப்பது). கொஞ்சம் கொஞ்சமாக அவனது மெய்யறிவு விரிவடைகிறது.*

*காம்ய கர்மங்களைச் செய்வதன் மூலம் மட்டுமே தன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளமுடியாது. சர்வ சக்தி வாய்ந்த சர்வக்ஞனாக, தெய்வம் உண்டு என நம்பி, அது பல வடிவங்களில் உள்ளது என்று எண்ணி தனது பல்வேறு ஆசைகளை நிறைவேற்ற பல்வேறு நாமரூப உபாசனைகளில் ஈடுபடுகிறான். பக்குவப்படாத அவன் மனம், பல்வேறு நாமரூபங்களுக்கு பல்வேறு சக்திகள் உண்டு என்று எண்ணி, பல்வேறு ஆசைகளை நிறைவேற்ற பல்வேறு தெய்வ வடிவங்களை வழிபடுகிறான்.*

*மனம் பரிணாமம் பெற்று, மூன்றாம் நிலையை அடையும்போது, கடவுள் ஒருவரே; அதன்*



வெளிப்பாடு மட்டுமே வெவ்வேறு நாமரூபங்கள் என்று அறிந்து, தனது இஷ்டதெய்வத்தைத் தேர்ந்து எடுத்து, அதன் மூலமாகவே தனது எண்ணங்கள் அனைத்தையுமே பூர்த்தி செய்து விடலாம் என்று நம்பி அந்த இஷ்ட தெய்வத்தையே ஏகாக்கிரமாக உபாசிக்க ஆரம்பிக்கிறான்.

இந்த மூன்றாம் நிலையில், அவனுக்குத் தனது இஷ்ட தெய்வத்தின்மீது ஏகாக்கிர பக்தி ஏற்பட்ட போதிலும், அது அவனது ஆசைகளைக் குறித்தே அமைகிறது.

அந்தத் தெய்வத்தின்மீது அன்பு முதிரமுதிர தனது உலகியல் நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்காக இறைவனிடம் வேண்டுவதைவிட்டு, இறைவனின் பேரன்பிற்காக மட்டுமே செய்கின்ற நிஷ்காம்ய பக்தி அவனுள்ளே மலர்கிறது.

இந்த நிஷ்காம்ய பக்தி பூர்ணம் அடைகின்றபோது நான்காம் நிலையில் அவன் இதுகாறும் நிஷ்காம்யமாக உபாசித்த இஷ்டதெய்வமே சத்குருவாக அவன் முன்னே தோன்றுகிறது. அவனுடைய தூயஉள்ளம், தனக்குமுன்னே மனித வடிவில் தோன்றியுள்ள சத்குருதான், இதுகாறும் தான் உபாசித்து வந்த இறைஉரு என்ற உண்மையைக் கூறுகின்றது.

இதையே கந்தர் அலங்காரத்தில்,

**திருவடியும் தண்டையும் சிலம்பும் சிலம்பு ஊடுருவப்**
**பொரு வடிவேலும் கடம்பும் தடம்புயம் ஆறிரண்டும்**
**மருவடிவு ஆன வதனங்கள் ஆறும் மலர்க் கண்களும்**
**குருவடிவாய் வந்து என் உள்ளம் குளிரக்**
**குதிகொண்டவே.**

“தனது வழிபடு கடவுளான முருகனே, சத்குருவாய் வந்து என்முன்னே தோன்றியுள்ளான். அவன் என்முன்னே தோன்றியவுடன் என் உள்ளத்தில் பேரானந்தம் ததும்பத் தொடங்கியது” என்று அருணகிரிநாதர் பாடுகிறார்.

இந்த நிலையில் சற்குருவின் உண்மையான வடிவமான ‘நான் இருக்கிறேன்’ ‘அஹம் பிரஹ்மாஸ்மி’ என்ற பேருண்மையின் மீது அவன் மனத்தை உள்முகமாகத் திருப்பி அவன் மனம் த்வைத நிலையிலிருந்து அத்வைத நிலைக்கு மேலும் பரிணாம வளர்ச்சி அடைகிறது. இதற்கு குருவின் வாய் மூலமான உபதேசங்களும், அவரது எழுத்துக்களும் மட்டுமே காரணமல்ல. அவர் தனது ஆத்ம விகாஸமாகிய மஹா சக்தியால் அவனது மனமாசுகளை முற்றிலும் நீக்கி,

*சரியான ஞானவிசார நெறியில் அவனைச் செலுத்தி உள்முகப் படச் செய்கிறார். இதையே பகவான், "ஸத்குரு வெளியிலிருந்து குரு வடிவில் தோன்றி, அவனை இதய ஸ்தானத்தை நோக்கி உந்துகிறார். இதயத்தின் உள்ளே ஆத்மஸக்தியாய் இருந்து உள்நோக்கி இழுத்து, இதயத்தில் ஒன்றச் செய்கிறார்" என்கிறார்.*

*இங்ஙனம் வெளிப்புறத்தில் இருந்து, உள்நோக்கி உந்தியும் உட்புறத்தில் இருந்து இதயத்தை நோக்கி உள்ளிழுத்தும் அருள் செயல் புரியும் ஸத்குருவின் அருளால், தன் உள்ளே 'நான்-நான்' என்று ஸதா அதிர்ந்துகொண்டு இருக்கும் ஆத்மா எது என்று தேட ஆரம்பிக்கிறான். இதுவே பகவான் கூறும் "வெளிவிடயங்களை விட்டு மனம்தன் ஒளி உருவை நாடும் பயிற்சி." இதில் தீவிரமாக ஆழ்கிறான். மனம் மாசுமறுவற்ற தூயதாகி உள்ளிருக்கும் இறைவனைக் காண வழி செய்கிறது. முன்னிலை, படர்க்கையில் இருந்து உள்முகமாகத் திரும்பி உதித்த இடத்தில் ஒடுங்குகிறது. இதுவே இறுதி நிலை. இதுவே அமரத்வம்.*

***ப்ரதிபோ$^{3}$த$^{4}$விதி$^{4}$தம் மதம் அம்ருதத்வம் ஹி விந்த$^{3}$தே***

*என்று எப்போதும் 'நான்-நான்' என்று உள்ளே அதிர்வது என்பதை நாடி அறிவதே அழியாமையை அடையும் வழி என கேன உபநிஷதம் கூறுகிறது.*

*'தெய்வம், குரு, ஆத்மா இவை ஒன்றே' என்று பகவான் அறுதியிட்டுக் கூறுகிறார்.*

*குரு ரமணர் வெறும் உடல் வடிவமல்ல. 1879-இல் தோன்றி 1950-இல் ஒடுங்கியவரல்லர். அவர் ஒரு நிரந்தரமான சக்தி. யோக சூத்ரத்தில் பதஞ்சலி மஹரிஷி கூறுகிறார்.*

***பூர்வேஷாம் அபி குரு: காலேன அநவச்சே$^{2}$தா$^{3}$த் ॥***

*"காலம் இடம் அனைத்தையும் கடந்த ஸத்குரு நிரந்தரமானவர். அவர் இடையறாது யுகயுகமாக ஞானத்தை வழங்கிக் கொண்டிருக்கிறார்" என்பது பதஞ்சலியின் வாக்கு (யோக ஸூத்ரம், 1.26).*

*இந்த வாழ்க்கை என்பது ஒரு சக்ர வியூஹம். மஹாபாரதத்தில் சக்ர வியூஹத்திற்கு உள்ளே செல்வதை மட்டும் அறிந்து இருந்த அபிமன்யு, உள்ளே சென்றபின் அதிலேயே சிக்கிக்கொண்டு வெளியே வர வழி தெரியாமல் மடிகிறான். அதுபோன்றே வாழ்க்கை என்னும் சக்ர வியூஹத்தில் நாம் உள்ளே சென்று சிக்கிக் கொள்கிறோம். வெளியேவரும் வழியை ஆசார்யன் விளக்கியதை அபிமன்யு கவனித்துக் கேட்காமல் அன்னையோடு தூக்கத்தில் ஆழ்ந்ததால் பின் அழிவு வந்தது. நமக்கு இந்த சக்ர வியூஹத்திலிருந்து வெளிவர பகவான் எனும் பெரும் ஆசார்யன் வழிகாட்டுகிறார். மாயையாம் தூக்கத்தில் நாம் ஆழ்ந்துவிடாமல், ஸத்குரு ரமணர் வழிகாட்டுதலை உன்னிப்பாகக் கேட்டுப் பின்பற்றினால் இந்த சக்ர வியூஹத்திலிருந்து வெளிவருவோம்.*

*மீண்டும் பதஞ்சலியின் சூத்ரங்களைக் காணும்போது அவை பகவானின் ஞான உபதேசத்தையே பிரதிபலிப்பதை நோக்குகிறோம். எடுத்துக்காட்டாக 'ஈஸ்வரன் யார்?' என்ற வினாவிற்கு பதஞ்சலி அழகாக விடை அளிக்கிறார்.*

*தத்ர நிரதிஶயம் ஸர்வக்ஞ பீ³ஜம்*

*கடவுள் எல்லையற்றவர். வரையறை கடந்தவர். எல்லா ஞானத்திற்கும் அவரே அடித்தளம். அவரே எல்லா அறிவிற்கும் வித்து (யோகசூத்ரம், 1.25).*

*இந்த வித்தின் தொடக்கம் எது என்பதை இதற்கு முன்னால் உள்ள சூத்ரங்களில் (1.23 - 1.26) காணலாம்.*

*க்லேஶ கர்ம விபாக அஶயைஹி*
*அபரம் ரிஷ்டஹ புருஷ விஶேஷ ஈஶ்வர*

*(யோகசூத்ரம், 1.24)*

*"மாசுகள் அத்தனையும் அற்று, செயல்கள் அனைத்தையும் கடந்து, கர்மங்களைப் புரியத் தூண்டும் வாஸனைகளைத் தாண்டிய விசேஷமான பேருருவே இறைவன்." இதில் இறைவனைப் பற்றிக் குறிப்பிடும் ஒவ்வொரு சொல்லும் பகவானையே சுட்டுகின்றது அல்லவா?*

*மேலும்,*

*தத்ர நிரதிஶயம் ஸர்வக்ஞ பீஜம்*

*"இந்த மஹிமை வாய்ந்த மஹா புருஷன் எல்லா ஞானத்திற்குமே விதையாவான்" என்கிறார் பதஞ்சலி.*

*மிகப் புனிதமான ஆத்ம ஞானத்திலிருந்து, வாழ்க்கையின் அடிப்படைத் தேவையான சமையல் கலை உட்பட அனைத்தையும் அறிந்தவர் பகவான் - ஸர்வக்ஞன். பயனற்றுத் தூக்கி எறியப்படும் கத்தரிக்காயின் மேல் தோலைக்கூட சுவைமிக்க உணவாக மாற்றி அமைப்பவர்; பறவைகள், விலங்குகள் முதல் தாவரங்கள் வரை அனைத்தின் உயிர்த் துடிப்பையும் அறிந்தவர். அவை மௌன மொழியில் கூறுவதையும் தெள்ளத்தெளிவாக உணர்ந்தவர். விரிசல் விட்ட முட்டையிலிருந்து கூட உயிரைத் திருப்பிக் கொணரும் வித்தை அறிந்தவர். முருகனார் கூறுவதுபோல் மேருமலையை அடைந்த கருநிறக் காக்கையும் பொன்னிறம் ஆவதுபோல், தன்னிடம் சரணடைந்த தகுதி குறைந்தவர்களைக்கூட பேரறிவு பெற்றவர்களாக மாற்றும் ஞான ரஸவாதம் அறிந்தவர்.*

*'நிரதிஶயம் ஸர்வக்ஞ பீஜம்' என்னும் பதஞ்சலி மஹரிஷியின் சூத்ரத்திற்கு இவரல்லவோ முழுப் பிரமாணம்! இங்ஙனம் ஸர்வ ஞானம் படைத்த*

*பகவானிடம் சரண் புகுவதே, நமக்கெல்லாம் ஆதிமூலமாகிய பரத்தில் ஒன்றும் வழி என்னும் பதஞ்சலி வாக்கு இங்கே நினைவு கொள்வோம்.*

*ஈஶ்வர ப்ரணிதா[4]னாத்[3] வா (யோக சூத்ரம், 1.23)*


*பகவானின் கருத்தில் "குரு என்பவர் யார்" என்று காண்போமா? இதை விளக்குமுகமாக புகழ்பெற்ற எழுத்தாளரும், பாடகரும் ஆன திலீப்குமார் ராய், கேட்ட வினாக்களையும் அதற்கு பகவான் அளித்த விளக்கத்தையும் காண்போம்.*

*திலீப்குமார் ராய்: குரு தேவையில்லை என்று மஹரிஷி கூறியதாகச் சிலர் அபிப்ராயப் படுகின்றனர். வேறு பலர் எதிர்மாறாகத் தேவை என்று கூறுகின்றனர். மஹரிஷியின் உண்மையான கருத்து எது?*

*பகவான்: குரு தேவையில்லை என்று நான் ஒருபோதும் கூறியதில்லை.*

*ராய்: தங்களுக்கு குரு என்று யாரும் இருந்ததில்லை என்று ஸ்ரீஅரவிந்தர் அடிக்கடி கூறுவார்.*

*பகவான்: குரு யார் என்பதைப் பொறுத்தது அது. குரு என்பவர் மனித உருவத்தில்தான் இருக்க வேண்டும் என்பது இல்லை. தத்தாத்ரேயருக்கு இருபத்து நான்கு குருமார்கள் இருந்தனர். அவர்களுள் பல இயற்கைத் தத்துவங்களே அவருக்குக் குருவாய் அமைந்து இருந்தன. அதன் உட்பொருள், உலகத்தில் காணப்படும் எந்த உருவப் படிமமும் அவரது குருவாக அமைய முடியும் என்பதே. ஒரு குரு என்பவர் கட்டாயம் தேவை. மனவிசாரங்கள் ஆகிய இருண்ட காட்டில் இருந்து மனிதனை மீட்க குரு ஒருவரால் மட்டுமே முடியும் என்று உபநிஷத்துகள் கூறுகின்றன. ஆகவே குரு அவசியம் தேவை.*



*ராய்: நான் கேட்பது மனித வடிவில் வரும் குருபற்றி. மஹரிஷி ஆகிய தங்களுக்கு அங்ஙனம் குரு இருந்ததில்லையே!*

*பகவான்: ஏன்! எப்போதோ ஒருசமயம் எனக்கும் ஒரு குரு இருந்திருக்கலாம்! நானே அருணாசலத்தைக் குருவாக எண்ணிப் பாடல்கள் பாடி உள்ளேன். இறைவன் அல்லது குரு என்பது என்ன? ஆத்மாவே குரு. மனிதன் தன் விருப்பங்கள் நிறைவேற இறைவனை வேண்டுகின்றான். பின்னர் ஒரு நிறைவு நிலை வருகிறது. ஆசையைப் பூர்த்தி செய்ய செய்யப்படும் வழிபாடு நின்றுபோய், நிஷ்காம்யமாக இறைவனையே தியானிக்கிறான். அப்போது கடவுள் அவன் முன்னர் ஏதோ ஒரு உருவில் காட்சி அளிக்கிறார். அவனுடைய ஆழ்மன வழிபாட்டுக்கு இறைவன் தானே குருவாய்த் தோன்றி வழிகாட்டுகிறார்.*

*வழக்கமாக பகவான் குரு என்பவர் மனித வடிவில் இருக்கவேண்டிய அவசியம் இல்லை என்று கூறுவார்.*

*அதற்கு மாறாக இங்கு திலீப்குமார் ராய்க்கு புதுவடிவில் விளக்கம் அளித்துள்ளார் பகவான்.*

*வெங்கடராமன் என்னும் சாதகர் கேட்டதாவது:*

*பகவான் தான் ஒரு குரு என்பதை வெளிப்படையாகக் கூறாவிடினும், கோடி காட்டியாவது உள்ளாரா?*

*பகவான்: இரண்டு செயல்கள் செய்யவேண்டும். முதலில் உன்னை விடுத்து வேறு ஒருவரைக் குருவாக ஏற்றாக வேண்டும். அதன்பின் உன்னுள்ளேயே ஆத்மாவாக ஒளிரும் குருவைத் தேடவேண்டும்.*

*கபீர்தாஸர் ஒரு அழகான பாடலில் கூறுகிறார்:*

*“எதுவரை ‘நான்’ என்பது இருந்ததோ, அதுவரை குரு (என்னுள்) இல்லை. இப்பொழுது குரு இருப்பதால் நான் இல்லை. அன்பின் பாதை மிகக் குறுகலானது. அதில் இருவர் இருப்பது சாத்யமே இல்லை. இதுவே குருபக்தி! இதுவே அத்வைதம்!”*

*ரமணன் என்பது ஒரு மஹாசக்தி. அது எல்லைக்குட்பட்ட வஸ்து அல்ல. பகவானே கூறுகிறார்: “ரமணனை ஏன் எண்சாண் உடம்பினுள் அடைக்க வேண்டும்? ரமணன் எங்கும் வியாபித்துள்ளான்”.*

*பகவானின் ஆத்ம விகாஸத்தில் முக்குளித்து அவரை நம் சத்குருவாக வரித்துக் கொண்டபின், ரமண வழியைப் பின்பற்றி, அவரிடம் பூர்ண சரணாகதி செய்து, அவர் எனக்கு முக்தியோ, பந்தமோ, நன்மையோ, தீமையோ எதை எனக்கு அளிக்க முற்பட்டாலும் அவர் என்னை என் நிலையில் வைக்க விரும்பினாலும் அதுவே எனக்கு ஆனந்தம்.*

*“என் புகலிட நின் இட்டம் என் இட்டம்*
*இன்பதெற்கு என்னுயிர் இறையே!*

*- (அருணாசல பதிகம், 2)*

*"குறையும் குணமும் நீயல்லால்*
*எண்ணேன் இவற்றை என்னுயிரே*
*எண்ணம் எதுவோ அது செய்வாய்!*

*- (நவமணிமாலை, 7)*

என்று திடமான சரணாகதியுடன் இருப்பதே உண்மையான சாதகனின் நோக்கமும், வழியுமாம். "அத்தா! உனக்கு ஆளாயினி அல்லேன் எனலாமே!" என்று பாடும் சுந்தரமூர்த்தி நாயனாரின் நிலை இதுவே.

'சரணாகதி' என்ற சம்ஸ்க்ருத சொல்லை இருவிதமாகப் பொருள் கொள்ளலாம்.

'சரண்-ஆ+கதி' என்று பிரித்தால், 'உன் பாதமே எனக்கு அடைக்கலம்' என்று அவனிடம் அனைத்தையும் ஒப்படைத்து இருப்பது. 'சரண்+ஆகதி' என்றும் பிரிக்கலாம். 'ஆகதி' என்றால் வருதல் என்று பொருள். அவனிடம் சரணடைவது என்று நாம் தீர்மானித்தபின் நாம் வேறு எதுவும் செய்ய வேண்டியதில்லை. அடுத்த கணமே அவனே நம்மை நோக்கி வந்துவிடுவான் என்பதே பொருள். அதுவே அவனது ஒப்பில்லா பேரருள்.

குருவாசகக் கோவையில் இத்தகைய உயர்ந்த ஸத்குரு மற்றும் லட்சிய சீடனின் லட்சணங்களை பகவான் எடுத்துரைக்கிறார்.

*பரத்துவம்ஆம் மோனப் பதவெளியில் யான்அற்று*
*உருத்தபர பத்திஉணர்வு ஊற்றாம் - கருத்தின்*
*திரத்துவம்ஆம் உத்தம சத் சீடத் துவமே*
*குருத்துவமாக் கொள்க குறித்து. (269)*

"நான் என்ற அகந்தை அற்று, ஆன்மிக இதயப் பெருவெளியில் ஊன்றிய பரபக்தி உணர்வில் அறிவு ஸ்திரம் அடைவதே உத்தமமான சீடனின் லட்சணம். இவ் உத்தம சீடனுக்குரிய குணம் யாரிடம் உள்ளதோ

அவரே உத்தமமான ஸத்குருத்துவமும் உடையவர் என்று அறிக!" என்பது பொருள்.

இந்தப் பாடலுக்குப் பொருள் கூறும்போது ஸ்ரீமுருகனார் 'பரபக்தி என்ற உணர்வே ஞான ஸ்வரூபமாகும்'. அந்த நிலையில் நிலைத்திருப்பதே உத்தம சீடனின் நிலை. அதுவே ஸத்குருவின் உயர்நிலையாக ஒளிர்கின்றது. சாதனையும் லட்சியமும் பாதையும் நோக்கமும் சீடன் என்ற நிலையும், ஸத்குரு என்ற நிலையும் ஒன்றாகின்றன.

'ஒரு பொருளே ஆவர் உந்தீபற'

என்பது பகவான் வாக்கு.

உண்மையான குரு லட்சணத்தை பகவான் மேலும் விளக்கிக் கூறுகிறார்.

அடைந்தவர்க்கும் பின்னும்ஒன்றை ஆணை இடுவோன்
அடைந்தகொடும் கூற்று விதியாவான் - அடைந்தவரைச்
செய்வன செய்து முடித்தோராத் தீர்ப்போனே
தெய்வ அருள்குருவாத் தேர். (271)

பொருள்: தன்னிடத்தே சரண் அடைய வந்தவரை, "இந்த மாதிரி பல்வேறு சாதனைகளைச் செய்துகொண்டே இருங்கள் என்று கட்டளையிடும் குரு, அவர்களைக் கொல்லவந்த யமனும், மீண்டும் பிறப்புச் சுழலில் சிக்க வைக்கும் பிரம்மாவும் ஆவான். அவ்வாறு இல்லாமல் தம்மிடம் சரணென வந்தவரை 'நீ செய்யவேண்டியது ஒன்றுமில்லை. நீ எப்போதும் ஆத்மாவே' என்று விளக்கிக் காட்டி, உணர்த்தி, 'சும்மா இரு!' என்று உபதேசிப்பவரே தெய்வீக அருட் குரு என்று அறிந்துகொள்."

எந்த ஒரு குரு தனது சீடரை, ஞானவிசாரத்தில் ஈடுபடச் செய்யாமல் தேவையற்ற பல்வேறு சமயச் சடங்குகளிலும் ஹோமங்களிலும் ஈடுபடச்

*செய்கிறானோ, அந்தக் குருவே மீண்டும் மீண்டும் இந்த உடலை இறக்கச் செய்யும் யமனும், பிறக்கச் செய்யும் பிரம்மாவும் ஆவன் என்று அங்கதமாகக் கூறுகிறார்.*

பகவத் வசனாம்ருதத் தொகுப்பில் அன்பர் ஒருவர் *வினவுகிறார். இதுவரை, நான் கற்றதெல்லாம் அறிவு சார்ந்த ஒன்றே. இதனை அனுபவத்தில் கொணர்வது எவ்வாறு என்பதை பகவான் விளக்குகிறீர்களா?*

பகவான்: *ஒரு தீவிர சாதகனிடம், 'இது செய்! அது செய்!' என்று கட்டளை தருபவன் ஓர் உண்மையான குரு அல்ல. சாதகன் பல்வேறு விதமான செயல்களாலும் இப்பொழுது உள்ள நிலையிலே கூட அதிகம் பாதிக்கப்பட்டுள்ளான். அவன் பேரமைதியை விழைகிறான். அவன் தனது செயப்பாடுகள் அனைத்தையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வர விரும்புகிறான். இதற்குப் பதிலாக (இந்த போலி குருமார்களால்), இப்போது செய்யும் செயல்களுக்குப் பதிலாக வேறு பல மாற்றுச் செயல்களைச் செய்யும்படி கூறப்படுகிறான். இதனால் சாதகனுக்குப் பயன் ஏதும் உண்டா?*

*செயல்பாடு என்பது ஒருவன் உள்ளே ததும்பிக் கொண்டு இருக்கும் ஆனந்தத்தை அழிக்கிறது. நீ பல்வேறு செயல்களில் ஈடுபடுவாய் என்று ஒரு ஆசான் கூறுவானாயின், அது சாதகனின் அழிவுக்கே வழி வகுக்கும். அத்தகு ஒரு ஆசான் மேலும் மேலும் பிறவி எடுக்கச் செய்யும் பிரம்மனோ அல்லது அழிக்கும் யமனாகவே இருக்க வேண்டுமே அன்றி, வழிகாட்டும் ஆசானாக இருக்க முடியாது. அத்தகைய குரு சீடனை பிறவித் தளையிலிருந்து விடுவிப்பதில்லை. மாறாக, அவனைப் பிணிக்கும் சங்கிலிகளை மேலும் இறுக்கமாக்குகிறான். (திருஅருண்மொழி 60)*

*உண்மை என்னவெனில் எவ்விதமான கருமங்களில் ஈடுபடினும் அவை புதுத்தளைகளையே உருவாக்கச் செய்யும். எனவேதான் ‘ஒழிவில் ஒடுக்கம்’ நூலில் எந்த ஒரு குரு புதுப்புது கர்மங்களையும் சடங்குகளையும் ஹோமம் முதலியவற்றையும் செய்ய வேண்டும் என்று முன்னேயே பல்வேறு கர்மங்களில் உழன்று முடித்த சாதகனிடம் கூறுகிறாரோ அவர் (முன் கூறியபடி) பிரம்மாவுக்கும் யமனுக்கும் ஒப்பாவார். அத்தகைய சீடனுக்குப் புதுப்புது பிறப்புகளையும், இறப்புகளையும் ஏற்படுத்தித் தருகிறார். (அனுதினமும் பகவானுடன், 27 மார்ச் 1946 உரையாடல்).*

*தானே ஆத்மானுபவத்தில் திளைத்திருந்து, தன்முனைப்பு ஏதுமின்றியும், எச்செயலையும் செய்யாது தான் தானாகவே இருந்து, தன்னிடம் வந்த சாதகனையும் அக்கர்மமில்லா நிலைக்கு உயர்த்துபவனே உண்மையான ஸத்குரு எனப் பகவான் கூறுகிறார்.*

*உண்மையான சத்குருவும் நம் ஆன்மாவும் ஒன்றுதான். அதுவே என்றும் இரண்டற்று விளங்குகிறது. தன்னிடம் சரண்புகும் சீடன் எவனும் அவ்வான்மாவுக்கு அந்நியனல்ல என்பதை அச்சீடனே ஐயம் திரிபற அறிந்துகொள்ளும்படி குரு உபதேசிக்கிறார். அவரது மௌன உபதேசம் சீடன் இதயத்தில் நேராகப் பாய்கிறது.*

*சும்மா இருப்பதைத் தவிர தான் செய்ய வேண்டியது ஏதுமல்ல; இயற்ற வேண்டியது ஏதுமல்ல என்பது அறிந்து அவன் தன்னில் ஒன்றுகிறான்.*

*நம்மைத் தன் கட்டுக்கு ஆட்படுத்தும் எதனையும் விட்டுவிடு என்பதை வலியுறுத்தும் ரிச்சர்ட் பாக்கின் உருவகக் கதை நினைவுக்கு வருகிறது. அக்கதையாவது:*

*ஒருகாலத்தில் ஒரு ஊரின் வழியே ஓடிக்கொண்டு இருந்த ஒரு நதியில் அடிப்படுகையில் பல்வேறு உயிரினங்கள் கூட்டமாக வாழ்ந்துகொண்டு இருந்தன.*

*அந்த நதியின் நீரோட்டம் முதியவர், இளையவர், நல்லோர், தீயோர் என்ற பேதமின்றி அனைத்தையும் அணைத்துக்கொண்டு, பிரவாகமாக ஓடியது. அந்த நதியின் அடித்தளத்தில் இருந்த ஒவ்வொரு ஜந்துவும், 'நாம் மேலே சென்றால் ஆற்றுப் பிரவாகத்தில் அடித்துச் செல்லப்பட்டு மாய்வோம்' என்று அஞ்சி, அடித்தளத்தில் இருந்த பல்வேறு பாறை, வேர்கள் போன்றவற்றைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு இருந்தன. பிறப்பெடுத்த சமயத்தில் இருந்தே நீரோட்டத்தை எதிர்த்து எதையோ பிடித்துக்கொண்டு தொங்கி வாழ்வதுதான் வாழ்க்கை. அந்தச் சார்பை விட்டால் அழிவுதான் மிஞ்சும் என்பதே அவற்றின் கொள்கை.*

*நெடுங்காலம் இந்த உயிரினங்கள் இங்ஙனம் வாழ்ந்துகொண்டு இருந்தன. அவற்றுள் ஒரு ஜந்து மட்டும் இங்ஙனம் எண்ணியது. இப்படி ஆற்றின் அடித்தளத்தில் பாறையில் ஒட்டிக்கொண்டு வாழ்ந்து வருவது அலுத்துவிட்டது. அஞ்சி அஞ்சி வாழ்ந்தது போதும். இந்த நதி ஒரு லட்சியத்தை நோக்கித்தான் செல்கிறது என்று எண்ணுகிறேன். நான் போகவேண்டும் திசையும் அதுவாகவே இருக்கவேண்டும். எனவே இந்தப் பாறையின் மீது பற்றிக் கொண்டுள்ள என் பிடியை விட்டு விடுகிறேன். இந்த நதிப்பிரவாகம் என்னை எங்குவேண்டுமானாலும் கொண்டு செல்லட்டும். அதை எண்ணி நான் அஞ்சப் போவதில்லை என்று முடிவெடுத்தது. அங்குப் பாறைகளைப் பற்றி வாழும் உயிரினங்கள் அனைத்தும் அதனைப் பார்த்து எள்ளி நகையாடின அல்லது அதனது முட்டாள்தனத்தை எண்ணி வருந்தின. "மூடனே! இதுநாள்வரை நமக்குப் பாதுகாப்பு தந்துவரும் இந்தப் பாறையின் பிடியை விட்டுவிடாதே! விட்டால் ஆற்றின் வேகத்தால் அலைக்கழிக்கப்பட்டு, பாறைகளில் மோதி, சிதறுண்டு போவாய்!" என்றன.*

*அந்தத் துணிவுமிக்க உயிரினம், அவற்றின் அச்சுறுத்தலால் அசராமல், துணிவுடன் பாறையைப் பற்றிய தன் பிடியை விட்டது.*

*அவ்வளவுதான்! வேகமாகச் சுழித்துச் செல்லும் நீரோட்டம் அதனை அடித்துச் சென்றது. அந்த உயிரினம் நீரோட்டத்தில் சிக்கி பல கூர்மையான பாறைகளின்மீது உருட்டப்பட்டு, வேகமாக அடித்துச் செல்லப்பட்டது. என்னதான் மோதுண்டாலும் அது தன் நெஞ்சுரத்தை இழக்காமல் எந்தப் பற்றுக்கோடையும் மீண்டும் பிடிக்காமல், நீரோட்டத்தில் வேகமான உந்துதலை எதிர்த்துப் போராடாமல் சென்றுகொண்டே இருந்தது. சிலதூரம் கடந்தபின், ஆற்று வெள்ளம் அமைதி அடைந்து அதனை மேலே, மேலே தூக்கிச் சென்றது.*

*தெளிந்த நீரோட்டத்தின் மேலே வந்துவிட்ட அந்த உயிர் தன்னைச் சுற்றிலும் பார்த்தது. மேலே பரந்த வானம், இருபுறமும் மலர் பூத்துக் குலுங்கும் செடிகள், கனி தூங்கும் மரங்கள், அடர்ந்த அழகிய வனம், அதில் துள்ளித் திரியும் புள்ளிமான்கள், அனைத்தும் மனத்தைக் கவர்ந்தன. பார்க்குமிடம் எல்லாம் நாமன்றி வேறில்லை!*

*பார்க்கப் பார்க்கக் களியாட்டம் என்ற பாரதி பாடலைப் பாடிக்கொண்டு, அது தளை ஏதுமின்றி ஆனந்தமாக ஆற்றின் மேலே மிதந்து சென்றது.*

*அது இங்ஙனம் பல மைல்கள் கடந்து சென்றது. அது செல்லும் ஆற்றுப் பாதையின் அடிப்படுகையில் பாறையைப் பற்றிக்கொண்டிருந்த ஜந்துக்கள் கூவின. "என்ன அற்புதம்! நம்மைப்போல் இருந்தாலும் இவர் ஓர் சித்த புருஷர்; இவரே நம்மை உய்விக்க வந்த மஹான்!" என்று ஆர்ப்பரித்தன. ஆற்றின்மேலே ஆனந்தமாய் மிதந்து செல்லும் உயிரினம் கூறியது: "நான் ஒரு சித்த புருஷன் அல்ல. நானும் உங்களைப்*

*போன்றவன்தான். நமக்கு நாமே ஏற்படுத்திக்கொண்ட பந்தங்களை விட்டு விட நாம் துணிந்துவிட்டால் இந்த நதியின் அருட்பிரவாகம் நம்மை முக்தி நிலைக்கு அழைத்துச் செல்வதை மகிழ்வுடன் செய்யும். இதுவரை அறியாமையால் ஏற்பட்ட தளைகளிலிருந்து விடுபடவே நமது முயற்சியாக இருக்கவேண்டும். இந்த பந்தங்கள் நம்மைப் பிணிக்கின்றன என்று அறியாமல், அவை நம்மைப் பாறைகள்மீது மோதாமல் காப்பவை என்ற தவறான எண்ணத்தைக் கைவிட வேண்டும். இது ஒன்றே தேவை!" என்றது.*

*பாறைகளைப் பிடித்துக்கொண்டு இருந்த உயிரினங்கள், தங்கள் பாறைகளில் தொங்கிய பிடியைச் சற்றும் விடாமல் "இவரே தேவதூதன், ரக்ஷண்யன்!' என்று குரல் எழுப்பின. மேலே பயணிக்கும் உயிரினம் அந்த இடத்தையும் தாண்டித் தன் பயணத்தைத் தொடர்ந்தது. பாறைகளைப் பிடித்துக் கொண்டிருந்த ஜந்துக்கள், உண்மையை அறிய முற்படாமல், அந்த 'தேவதூதனைப்' பற்றி புராணங்களை எழுதி வைத்தன!*

*இந்த ரிச்சர்ட் பாக்கின் சிறுகதையில் வரும் ஆறுதான் இறைவன் அல்லது பகவானின் அருட்பிரவாஹம். தன்னைக் கட்டுப்படுத்தும் தளைகளை எல்லாம் உதறிவிட்டு முக்திநிலைக்கு உயரும் அந்த ஜந்துதான் தீவிர சாதகன். பகவானிடம், "அருட்பிரவாஹமே! எனக்குத் தன்முனைப்பு என்று ஒன்று இல்லை. நான் முற்றிலும் உன்னைச் சரண் அடைந்து விட்டேன். நான் உன் கைப்பாவை. நீ எங்கு என்னை அழைத்துச் சென்றாலும் அது எனக்கு சம்மதமே!" என்னும் பூரண சரணாகதி அடைந்து அந்த அருளின் ஆக்கத்தையே நம்பி, அந்த அறிவார்ந்த அஹங்காரம் சார்ந்த தன்முனைப்பை, இதுகாறும் 'தனது காவல்' என்று தவறாக எண்ணி வந்த கற்பாறை போன்ற தளைகளைக் கைவிட்டது. அதுவே அவனது முக்திக்குக் காரணமாக அமைந்தது.*

*"என்புகலிட, என் உயிர் இறையே!*
*நின் இட்டம் என் இட்டம். அது எற்கு இன்பு"*

என்ற பகவானின் பாடல் கருத்தை இந்த ஐந்து பிரதிபலித்து அருணாசலமாம் ஆத்ம நிலையை அடைகிறது.

ஆத்ம ஞானத்தைக் கணப்பொழுதில் பெற்ற பகவானின் மனப்பாங்கு எங்ஙனம் இருந்திருக்கும்? எடுத்துக்காட்டு திருஞானசம்பந்தர். சீர்காழிப் பிள்ளையார் உமையம்மை அளித்த ஞானப்பாலை அருந்தியவுடன் இதுவரை எந்த ஆத்மிக முயற்சியும் செய்திராத சிறுகுழந்தை இறைவன் திருவருள்தானே வந்து சேர்கிறது. ஞானப் பாலை அருளியவுடன் குழந்தைக்கு என்ன மாற்றம் ஏற்படுகிறது என்பதை சேக்கிழார் அழகுற விவரிக்கிறார்.

*சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்*
*பவம்அதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்*
*உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்*
*தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்*

*- (பெரியபுராணம், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்புராணம், 70)*

இந்தப் பாடலில் ஞானம் என்ற சொல் நான்குமுறை பயன்படுத்தப் பட்டுள்ளது. ஞானம் என்ற சொல்லோடு வெவ்வேறு அடைமொழிகளைப் பயன்படுத்தி சேக்கிழார் தெளிவாக்குகிறார். அன்னையின் அருட்பாலைப் பெற்ற உடனேயே வேறு எதைப் பற்றியும் சிந்திக்காமல், "சிவனடியே சிந்திக்கும் சிவஞானம்" என்று புலவர் விளக்குகிறார். மதுரை மாநகரில், வீட்டு மாடி அறையில் சில நொடிகளுக்குள் ஆத்மஞானம் பெற்றவுடன், பின் தொடர்ந்த பல மாதங்கட்கு வேறு எதையும் சிந்திக்காமல், ஆத்மசிந்தனையிலேயே ஆழ்ந்திருந்ததாக பகவானே குறிப்பிடுகிறார். மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் சென்றபோது "தம்மேலைச்

*சார்புணர்ந்தோ" என்று சேக்கிழார் கூறியபடி, தான் பரமனின் திருப்புதல்வன் என்பதை உணர்ந்து கண்ணீர் மல்க அன்னை மீனாட்சியை வழிபட்டு பின்னர் 63 நாயன்மார்களையும் பக்திப் பரவசத்துடன் வணங்கி வந்ததைப் பகவான் குறிப்பிடுகிறார்.*

*"பவம்அதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்" என்னும் சொற்றொடரும் ஞானசம்பந்தப் பிரான், பகவான் இருவரையும் குறிக்கும்.*

*ஞானம், பிறப்பை ஒழிக்குமா? அது எந்த ஞானம்? அபர ஞானம் என்பது உலகியல் பற்றிய ஞானம். பரஞானம் என்பது எல்லாவற்றையும் கடந்து நிற்கும் எல்லையில்லாப் பரம்பொருள் பற்றியது. கலைஞானம் எந்த நிலையிலும் பிறப்பை நீக்கப் பயன்படாது. ஆரம்பத்தில் அபரஞானத்தில் தொடங்கி, பரஞானமாக பரிணமிக்கும்போது அந்த ஞானம் பிறப்பை நீக்கப் பயன்படுகிறது. 'பாங்கினில் நீங்கிய ஞானம்' என்பது, 'ஞானத்தில் முதிரும்போது'; அறமாற்றும் பாங்கில்-இயல்பாகவே; தானாகவே பிறப்பு-இறப்பு சங்கிலிகள் அற்றுவிடுகின்றன என்பதைக் குறிக்கிறது. பாங்கு எனும் சொல், பகவான், ஞானசம்பந்தர் இருவருக்கும் பிறப்பினை மாற்றும் இயல்பாகவே வந்தது.*

*அடுத்து 'உவமை இல்லாக் கலைஞானம்' என்பது, மனிதனின் மனத்தினைத் தூய்மைப்படுத்தி, இறைவனது அன்பினில் மூழ்கி அவனைப் பாடும் இசைக்கலை, இயற்கலை கலைத்திறனைக் குறிக்கிறது.*

*நான்காவது சொற்றொடராகிய 'உணர்வு அரிய மெய்ஞ்ஞானம்' என்பது மிகச் சிறந்த ஒன்று. உணர்வு என்பது புறத்தே தனித்து நின்று சுட்டப்படும் அறிவைப் போன்ற ஒன்று அன்று. உள்ளத்தின் ஆழத்தில் பிறப்பது அது. இதை உணர்வில் ஆழ்ந்த ஒருவன் நிலை நீரில் கரைந்த உப்புபோல் தனித்தன்மை நீங்கி முழுதுமாக*

*வியாபித்து, தான் கரைந்த தண்ணீரின் இயல்பையும் மாற்றி, தானாகவே நிறையுமாறு செய்துவிடுகிறது. அதேபோல் மெய்யுணர்வு இடைப்பட்ட உயிர் தனித்தன்மை இழந்து, அந்த உணர்வு மீதார்ந்த மெய்யுணர்வையும் தன்னுடன் ஒன்றாக்கிக் கொள்கிறது. ஞானசம்பந்தரின் இந்த பரமாத்ம நிலையையே, பகவானும் தானும் பெற்று,*

***அம்புவில் ஆலிபோல் அன்புருவில்என***
***அன்பாக் கரைத்தருள் அருணாசலா***

*என்று குறிப்பிடுகிறார்.*

*'தாம் உணர்ந்தார் அந்நிலையில்' என்பது, எத்தகு நேர இடைவெளியே இல்லாமல் அதே நொடியில் பகவானையும் ஞானசம்பந்தரையும் வந்து அணைந்தன என்பதைக் குறிக்கிறது.*

*சாமான்ய சாதகர்க்கு நாம் முதலில் கண்டபடி சாதனைப் படிகள் தேவை. ஞானசம்பந்தர், பகவான் போன்ற ஞானியர்க்கு இறையில் ஒன்ற படிகளே தேவையில்லை. அவர்கள் ஒரேநொடியில் அனைத்துமையே உணர்வார்கள் என்பதையே 'தாம் உணர்ந்தார் அந்நிலையில்' என்ற சொற்றொடர் குறிக்கிறது. இணையற்ற பரமாத்ம நிலையை அவர் அடைந்திட்டார் என்பதே இங்குக் குறிப்பிடப்படுகிறது. இதுவே பதஞ்சலி முதல் பகவான் அனைவரும் சுட்டும் ஆழ்நிலை அனுபவம்.*

*மீண்டும் சந்திப்போம்.*

***பகவான் பணியில் தங்கள்,***

***ராம் மோஹன்***

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹன்

### 13. தெரிந்து தெளிதல்

*121.* *தேறித் தெளிமின் சிவம்என்றே உள்ளுணர்வில்*
*கூறிய பல்குணமும் ஆம்.*

*பொருள்: இதயத்தின் உள்ளே ஓங்கித் தோன்றும் ஞானமாகிய ப்ரணவத்தில் நிலைத்து நின்று, அதையே சிவஸ்வரூபம் என்று தெளிந்து அறிந்தால், ஞானிகளின் லட்சணம் இவை என்று அறியப்படும் எல்லாக் குணங்களையும் அடையலாம்.*

*122.* *உண்டுஇல்லை என்றும் உணர்வை அறிந்தக்கால்*
*கண்டில்லை ஆகும் சிவம்.*

*பொருள்: எல்லோருக்கும் அடிப்படையில் ஞானம் உள்ளது. அஞ்ஞானி என்று யாருமே இல்லை. அஞ்ஞானம் என்பது ஒரு போர்வையே. அதை சாதனையால் நீக்கினால் இறைவனை உணர்ந்து கொள்ள முடியும். இதுவே உண்மையான அறிவு. இதை அறியாதவர்க்கு முக்தி என்பது இயலாததாகும்.*

*விளக்கம்: ஆன்மஞானம் மற்றவர் சொல்லிக் கொடுத்து வராது. தொட்டனைத்தூறும் மணற்கேணி போன்று நம் ஆழ்மனதில் தோண்டத்தோண்ட ஞானம் ஊறுகின்றது. அப்போதே நமக்கு நாமே குரு ஆகின்றோம்.*

*அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்*
*எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே.*

என்று இந்தக் கருத்தையே கந்தர் அநுபூதியில் அருணகிரியார் கூறுகிறார்.

*123. ஒருவர்க்கு ஒருவனேயாகும் உயிர்க் கெல்லாம்
ஒருவனே பல்குணமு மாம்.*

பொருள்: ஒப்பற்ற ஞானிக்கு அச்சிவன் அந்த ஞானவடிவாகவே இருக்கிறான். பூர்ணஞானம் அற்றவர்க்கு, அவனே அவரது மனக் கற்பனையில் பல்வேறு நாமரூபங்களுடன், பல்வேறு குணங்களுடனும் தோற்றம் அளிக்கிறான்.

விளக்கம்: பூர்ணஞானமே ப்ரம்மம்; அதுவே இறைவன் என்று 'ப்ரக்ஞானம் ப்ரம்மம்' என்ற வேத மஹா வாக்யம் கூறுகிறது.

*124. எல்லார்க்கும் ஒன்றே சிவம்ஆவது என்றுஉணர்ந்த
பல்லோர்க்கும் உண்டோ பவம்.*

பொருள்: அனைத்து ஜீவர்கட்கும் ஒரே தெய்வமே ஆன்மாவாக உள்ளுறைகின்றது என்று ஆன்மவிசாரத்தால் ஆய்ந்து அறிந்தோர்க்கு, பிறப்பு-இறப்பு என்னும் சுழலில் சிக்கிக் கொள்ளும் அச்சம் இல்லை.

விளக்கம்: அனைவரும் ஒரே குலத்தைச் சார்ந்தவரே. அனைவருக்கும் உள்ளிருக்கும் இறைவன் ஒன்றே. இந்த நயம்தரும் உண்மையை எப்போதும் நினையுங்கள். உங்களை நாடி மரணம் வராது. நீங்கள் சிறிதும் வெட்கப்படாமல் தேடி அடையவேண்டிய கதி இது ஒன்றே. இதையே நினைத்து உய்வடைவீர்கள் என்று திருமந்திரம் கூறுகிறது.

*ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்ம்மினே*

- (திருமந்திரம், 2104)

*125. ஆயும்இரவியும் ஒன்றே அனைத்து உயிர்க்கும்*
*ஆயும்கால் ஒன்றே சிவம்.*

பொருள்: ஆராய்ந்து பார்க்கும்போது பரந்த உலகிற்கு ஒரேசூரியன் இருப்பதுபோல் அதில் வாழும் ஜீவன்கள் அனைத்திற்கும் சிவமாகிய உள்ளுறை ஆத்மா ஒன்றே.

விளக்கம்:

*சீவன் எனச் சிவன் என்ன வேறு இல்லை*
*சீவனார் சிவனாரை அறிகிலர்*
*சீவனார் சிவனாரை அறிந்த பின்*
*சீவனார் சிவனாய் இட்டு இருப்பரே.*

*(திருமந்திரம், 2017)*

ஜீவன் என்றும் சிவன் என்றும் இருபொருள் இல்லை. ஜீவன் தான் உடல்-மனம்-சிந்தையின் கூட்டமே என்று தவறாக எண்ணி இருக்கும்வரை, அது தானே சிவமாகிய பரமாத்மா என்பதை அறிய இயலாது. ஜீவன் தனது உடல்-மனம்-சார்பை விடுத்து, இதயத்தை நாடி உண்முக நோக்கம் பெற்றால், அது தானே பரமாத்மாவாகிய சிவன் என்பதை அறியும்.

*126. ஓவாதது ஒன்றே பலவாம் உயிர்க்கெல்லாம்*
*தேவானது என்றே தெளி.*

பொருள்: பலவிதமான உயிர்கட்கு எல்லாம் ஓங்காரமாகிய ப்ரணவமே சிவனகிய இறைவனாகும்.

விளக்கம்: 'உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா' என்று திருவாசகத்தில் மாணிக்க வாசகர் குறிப்பிடுகிறார். ஓங்காரத்தைப் 'ப்ரணவம்' என்கிறோம். மாண்டூக்ய உபநிஷதம் ஓங்காரத்தின் சிறப்பை விஸ்தாரமாக எடுத்து உரைக்கிறது.

*ப்ரபஞ்சோபஶம: ஶிவோத்3வைத*
*ஏவம் ஓங்கார ஆத்மைவ ஸம்விஶத்யாத்மனா*
*ஆத்மானம் ய ஏவம் வேத3 ॥ (மாண்டூக்ய, 12)*

*ஓங்காரம் ப்ரபஞ்சத்திற்கு எட்டாதது. சிவ ஸ்வரூபமானது. அதுவே பரமாத்மா. அநுபூதியில் அதை அறிபவன் தன்னைக் கொண்டே அப்பரமாத்மாவை சேர்கிறான் என்கிறது வேதம்.*

***127. தம்மை அறியாதார் தாம்அறிவோம் என்பதென்?***
***செம்மையால் ஈசன் திறம்.***

*பொருள்: தம்மைத் தாம் அறியாதவர்கள் ஈசனாகிய சிவத்தின் திறத்தை அறிவோம் என்று சொல்வது எப்படி முடியும்?*

*விளக்கம்: இதே கருத்தை பகவான் தனது ஆன்ம வித்தைக் கீர்த்தனத்தின் மூன்றாவது பாடலில் மிக அழகாகக் கூறுகிறார்.*

***"தன்னை அறிதல் இன்றிப் பின்னை எது அறிகில்என்?***
***தன்னை உணர்ந்திடில் பின்என்னை உளதறிய?"***

*இதன் பொருளாவது: தனது ஆத்ம ஸ்வரூபத்தை அறிதலை விட்டுப் பிறகு வேறு எதை அறிந்தாலும் அதனால் என்ன பயன்!*

*தன் உண்மை ஸ்வரூபத்தை (பரமாத்மா என) உணர்ந்து விட்டால் தனக்கு அன்னியமாக அறிவதற்கு வேறு என்ன உள்ளது? ஞானம் பெற்றபின் அனைத்தும் நானே என உணர்வாய் என்கிறார் பகவான்.*

***128. எல்லா உலகத்து இருந்தாலும் ஏத்துவார்கள்***
***நல்லுலக நாதன் அடி.***

*பொருள்: ஞானத் தேடலில் ஆழ்ந்த ஈடுபாடு உடைய எல்லா ஜீவர்களும் எந்த இடத்தில் இருந்தாலும், எத்தகைய உலக கார்யங்களில் ஈடுபட்டு இருந்தாலும், உலகின் ஆதி கர்த்தாவாகிய இறைவனை உள்ளத்தில் தியானித்து வணங்குவார்கள்.*

*விளக்கம்:*

***உயர்வற உயர்நலம் உடையவன் யவன்அவன்***
***மயர்வற மதிநலம் அருளினன் யவன்அவன்***

*அயர்வறும் அமரர்கள் அதிபதி யவன்அவன்*
*துயரறு சுடரடி தொழுதுஎழுஎன் மனனே.*

*அந்த இறைவனே தனது படைப்புக்கள் யாவற்றையும் விஞ்சி நிற்கும் உயர்வு உடையவன். அவனே என்போன்ற பக்தர்களின் மனக்குழப்பம் நீங்கும்படி ஞானத்தை அருள்கிறான். எல்லார் துயரையும் நீக்குகிறான். ஒளிபொருந்திய அவன் திருவடிகளை வணங்கி, நீ ஞானத்தில் விழித்து எழுவாய் என்று தன் மனதைப் பார்த்து நம்மாழ்வார் கூறுகிறார்.*

*129. உலகத்தில் பட்ட உயிர்க்கெல்லாம் ஈசன்*
*நிலவுபோல் நிற்கும் நிறைந்து.*

*பொருள்: உலகத்தில் வாழும் எல்லா உயிர்கட்கும் சிவம் நிலவைப்போல் நிறைந்த குளுமையை அளிப்பான்.*

*130. உலகத்தில் மன்னும் உயிர்க்கெல்லாம் ஈசன்*
*அலகிறந்த ஆதியே யாம்.*

*பொருள்: உலகில் வாழும் உயிரினங்கள் பல தம்மைத் தாமே காத்துக் கொள்ளும் சக்தி அற்றவை. அவற்றை எல்லாம் அளவற்ற அருளும் சக்தியும் படைத்த ஆதிபுருஷனாகிய சிவன் அவைகளுக்கு உள்ளே இருந்து காக்கிறான்.*

*விளக்கம்: இங்ஙனம் மஹாபாரதத்தின் இறுதியில் அஸ்வத்தாமனின் பிரம்மாஸ்திரம் பாண்டவர் வம்சத்தையே அழிக்க முனைந்தபோது, உத்தரையின் கர்ப்பத்தில் கருவாய் இருந்த பரீட்சித்தை இறைவன் காப்பாற்றினான்.*

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## மூலம்: மௌனிசாது

## தமிழாக்கம்: ராம்மோஹன்

### 20. ‘நான்’ என்னும் நீரொழுக்கு

மகரிஷியின் சந்நிதானத்திற்கு அடுத்தபடி நான் உணர்ந்த மிக உயர்ந்த மெய்யுணர்வு நிலையை இப்போது காண்போம். அது ’நான்’ என்னும் இடையறா உணர்வோட்டம். இதனை சாமான்ய வார்த்தைகளில் விவரிக்க இயலாது. இயற்கை சக்தி எப்போதும் குறைவுபடாது என்பதை நாம் ஏற்றுக் கொண்டால், தியானத்தினாலும் பகவான் சமாதியிலிருந்தும் ஆன்மிகக் கதிர்வீச்சு வருவது அறிந்து, அது ஓர் ஒப்பற்ற ஆன்மிகக் களஞ்சியத்தை உருவாக்குவதை அறியலாம்.

பகவானிடம் இருந்த அணுக்க அடியார்கள் முப்பது ஆண்டுகட்கு முன்பே இந்தக் கதிரியக்கத்தை அறிந்து இருந்தனர். இதை அவர்கள் ‘நான்’ என்னும் ஆன்மிக ஒழுக்கு என்று பெயரிட்டு இருந்தனர். பௌதிக விதிகளையெல்லாம் கடந்த இந்த அற்புத சக்தியினாலேயே, ஆசிரமத்தில் வியாதிகள் குணமாவதும் அன்பின் எழுச்சியும், ஆஸ்ரம பக்தர்களின் வாழ்வில் அற்புத மாற்றங்கள் ஏற்படுவதும் நிகழ்கின்றன என்று அன்பர்கள் நம்புகின்றனர். பகவானோ அடியார்கள் குறிப்பிடும் இந்த அற்புத நிகழ்வுகளைப் பற்றிப் பேசுவதே இல்லை. அவற்றை முற்றிலும் ஒதுக்கினார் பகவான்.

*ஒரு சக்தி வாய்ந்த மாபெரும் ஆன்மிக முனிபுங்கவர் உருவாக்கும்போது, அது நமது ப்ரக்ஞை உணர்வுடன் ஒருமையுற்றது. மகத்தான விளைவுகளை உருவாக்குகிறது என்பது மறுக்க முடியாத இயற்கை விதியாகும்.*

*விசார மார்க்கத்தை மட்டுமன்றி எனது இதயத்தோடு என்னை ஒன்றச் செய்யும் வேறு ஏதேனும் வழி உள்ளதா என்று நான் ஆய்ந்து கொண்டு இருக்கிறேன். அச் சமயத்தில் எனது மனமும் உணர்ச்சிகளும் நான் முழு அமைதியில் ஆழாமல் தடை செய்துகொண்டு இருந்தன.*

*எனக்கு அப்போது தோன்றியது 'நான்' ஏன் நான் எனும் நீரொழுக்கிலிருந்து அதை அடையக்கூடாது? ஆனால் அதை எப்படிச் செய்வது என்பது எனக்குப் புலப்படவில்லை. எனது முழுக் கவனத்தையும் இந்தக் கேள்வியில், நான் உள்ளுணர்வில் 'நான்' எனும் எண்ண ஒழுக்கு, நான் எனும் எண்ண ஒழுக்கு என்பதையே மந்திரம் போலத் திரும்பத் திரும்ப உச்சரித்துக் கொண்டு இருந்தேன். ஆனால் நான் ஏன் இதைச் செய்கிறேன் என்பது எனக்குப் புரிபடவில்லை.*

*உடனடியாக ஒரு அளவிடமுடியாத ஆற்றல் அருவி என் ஆத்மாவில் புகுந்து, நான் இதுகாறும் தேடிக் கொண்டிருந்த தேவைகளைப் பூர்த்தி செய்தது. என் மனதின் எதிர்மறை உணர்ச்சிகள் இந்தப் பெரு வெள்ளத்தால் அடித்து ஒதுக்கப்பட்டன. ஓர் அழிவுபட்ட படம்போல பௌதிக உலகம் என் மனத் திரையில் இருந்து மறைந்து நான் இந்நூலின் பல்வேறு பகுதிகளில் விவரித்த இந்தப் ப்ரக்ஞை உணர்வு என்னை முழுதுமாய் வியாபித்தது.*

*பின்னர் இந்த அகஞ்சார்ந்த சக்திப் பாய்ச்சலை மேற்கூறிய நோக்கங்களைப் பூர்த்தி செய்ய மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பதில்லை என்று நான்*

*உணர்கிறேன். அந்தச் சக்தி வெள்ளத்தினை வேறு சிறிய நோக்கங்களுக்கும் பயன்படுத்தலாம் என்பதை நான் உணர்ந்தேன்.*

*இதனை மனதின் ஒவ்வொரு சிறு அலைச்சலை வெற்றி கொள்ளப் பயன்படுத்த முடியும் என்பதை உணர்ந்தேன். அதேசமயம் என் உள்ளுணர்வு தூர தம்மியம் இன்றி இந்தப் பெரும் சக்தியை அற்ப விஷயங்களுக்கைப் பயன்படுத்தி வீணடிக்கக் கூடாது என்று எச்சரித்தது.*

*இந்த 'நான் ஒழுக்கினுடன்' தொடர்பு கொள்ளத் தேவையானது எது? இத்தகைய மாபெரும் சக்தி வெள்ளம் உண்மையிலேயே உள்ளது என்ற திட நம்பிக்கை, இந்த சக்தி பகவானின் ஆன்மிக நோக்கினை செயல் வடிவத்திற்குக் கொணரப் பயன்படும் என்ற உணர்வு, மற்றும் இதனால் மிக உயர்ந்த நோக்கம் வெற்றி பெறும் என்ற அக உணர்வு. பகவானிடம் இது குறித்து நான் பிரஸ்தாபிக்கவே இல்லை. அவர் தமது செயல்பாட்டை ஒரு உயர்ந்த தரத்திலிருந்து செயல்படுத்தும்போது இது குறித்து அவரிடம் கூறுவது எனக்கு அற்பமாகப் பட்டது. எனினும், நமக்கு முன் இப்பாதையில் சென்றவர்கள் எங்ஙனம் தங்கள் செயல்களில் வெற்றி கண்டார்கள் என்பதனை இச் சிந்தனை வெளிச்சமிட்டுக் காட்டுகிறது என்பது உண்மையே.*

*'இந்த நான் என்னும் பேராறு பாய்கிறது' என்பது உண்மை. இந்த மாபெரும் சக்தியில் இருந்து நமது நோக்கங்களை வெற்றி பெற பெரும் ஆற்றலைப் பெறலாம். இந்த உலக வாழ்வின் பெரும் தோழனாய் வந்து அவதரித்த மகான் நமக்கு அளித்த அருட்கொடையே இந்த 'நான்' என்னும் சக்தி வெள்ளம்.*

## 21. ஒரு இஸ்லாமிய ஞானியின் சமாதி

ஒருநாள், எனது நண்பர் ஒருவர் திருவண்ணாமலை மசூதியில் நடத்தப்படும் தொழுகையைக் காண அழைத்தார். அங்கே போனபோது, ஹாஜி என்று அழைக்கப்பட்ட அந்த வடக்கத்திய ஞானியைப் பற்றி அறிந்தேன். தான் இறப்பதற்கு சில நாட்கள் முன்னர் அவர்தம் சீடர்களிடம் கூறினார்.

"நான் எனது பூத உடலை விட்டுச் சென்றாலும் எனது ஆத்மா இங்கேயே, உங்களுடன் நிலைபெற்று இருக்கும். சமுதாய நிலை மற்றும் சமய வேறுபாடு இன்றி வெறுமே எனது சமாதிக்கு வந்து தொழுது பயன் பெறலாம். நான் அவர் எதிரில் உயிருடன் இருப்பது போலவே எண்ணி, தனது தேவையை தெளிவாக என்னுடன் எடுத்து உரைக்கலாம். அதை நான் கூர்ந்து கவனித்துக் கேட்டு அதனைப் பரம்பொருளுடன் எடுத்து உரைப்பேன். தனது ஊழியனின் வேண்டுகோளை ஏற்று, இறைவன் உங்கள் விருப்பத்தை பூர்த்தி செய்வார்."

முஸ்லிம், கிறிஸ்தவர் இந்து என எந்த வித்தியாசமும் இன்றி இந்த அருட்செயல் செயல்பட்டதை பல்வேறு சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. சில நாட்கள் அண்ணாமலையின் குகைகளில் சுற்றித் திரிந்தபின், இந்த ஹாஜியின் சமாதி ஸ்தலத்திற்குச் சென்றேன். அது ஒரு சாதாரணமான ஓலைக் குடிசை. அதற்குள்ளே, இங்கே வந்து நாள் முழுதும் எரிய விடப்படும் ஊதுபத்திகளை வழங்கும் ஒரு சேவகர், அமர்ந்து இருந்தார். இந்த ஸமாதிஸ்தலம். அது ஒரு எளிய நீள் செவ்வக வடிவில் அமைந்த ஒருகூடம். அந்த மண் தரையின் மூலையில் ஒரு பீடத்தின்மீது இரு தீபங்கள் எரிந்து கொண்டிருந்தன. அந்தக் குடிசையின் வெளியே நோக்கினால் ஒருபுறம் மசூதியின் வெண் சுவர்களும், மறுபுறம் சூரிய வெப்பத்தில் வாடும் வயல்களும் காணப்பட்டன.

இந்த ஸமாதி ஆலயத்தின் பேரமைதியும், சாந்தியும் துவங்கி இருந்தன. சூரியன் மெதுவாக மறையும் நேரம்; இந்த இடம் ஆழ்ந்த தியானத்தில் ஆழ்வதற்கு மிகத் தகுந்த இடம் என்பதை நான் உணர்ந்தேன்.

இந்தியாவின் உளம் சார்ந்த நிலை, ஏனைய நாடுகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. இந்தியாவின் மண்ணிலேயே தியான உணர்வு ஊன்றப்பட்டுள்ளது. இயற்கையின் எந்தச் சக்தியும் வீணாக்கப்படுவதில்லை என்பதை நாம் உணர்ந்தால், இந்தக் கருத்து புரியும். அசாதாரணமான ஆன்மிக சக்தி பெற்று லட்சக்கணக்கான ஞானிகள், பல்லாண்டு காலங்களாக இந்திய மண்ணில் தமது ஆழ் தியானத்தால் எழுந்த மாபெரும் ஆன்மிகச் சக்திகளை இந்திய மண்ணில் பதித்துள்ளனர். இந்த ஆன்மிகக் கதிர்வீச்சு இந்திய மண் முழுதும் படர்ந்துள்ளது. அதுமட்டுமன்றி, இந்திய மண்ணின் மக்களில் பலரது குறிக்கோள் பௌதிக நோக்கம் கடந்த உயர் நிலையைக் குறித்தே அமைந்துள்ளது. இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து, சிறந்த ஆத்மிக காந்த அலைகளை உருவாக்குகிறது. இவை ஆஸ்ரமங்கள் போன்ற தெய்வீக இடங்களில் சிறப்பாக ஒளிர்கின்றன.

எனக்கு இந்த இஸ்லாமிய ஞானியின் சமாதி ஸ்தலம் அத்தகைய ஒரு ஆத்மிக காந்த துருவமாகத் திகழ்ந்தது. நான் தியானிக்கத் துவங்கிய சில மணித் துளிகளிலேயே புற உலக உணர்வு முழுவதுமாக ஒதுக்கப்பட்டு அந்த ஞானியின் சந்நிதியை நான் உணர்ந்தேன். ஒரு இனிய, மிகச் சிறந்த அன்புணர்வு கொண்ட ஒரு வியக்தி என்னிடம் வந்து எனது தேவை என்ன என்பதை சிறிதும் தயங்காமல் கூறுக எனக் கேட்பதை உணர்ந்தேன். ஆனால் இச்சமயம், நான் பகவானின் சந்நிதியில் இருக்கும் போதெல்லாம் என் ஆழ்மனதில் இடையறாது எழும் ஒரே ஒரு எண்ணம் தவிர வேறு எந்தத்

*தேவையுமில்லை. இந்தத் தேவை என்ன என்பதை தெளிவாக வார்த்தைகளில் விளக்க முடியாவிட்டாலும், அது அந்தத் தியானத்தில் முழுதுமாக மூழ்க வேண்டும் என்பது மட்டுமே. அன்று இரவு நான் அறைக்குத் திரும்பிய பின் இந்த ஆழ் தியான உணர்வு என்னை முழுவதுமாக ஆட்கொண்டது.*

*பின் தொடர்ந்த வாரங்களில் நான் பலமுறை இந்த அமைதி சூழ் குடிசை ஆலயத்திற்கு வந்தேன். இந்தக் காலகட்டத்தில் பல பிரச்சனைகளில் நான் அவற்றில் ஒன்று தீர்வே காண இயலாத ஒரு சிக்கலாக அமைந்திருந்தது. ஆயினும், நான் இந்த சமாதி ஆலயத்திற்கு சென்று வந்த ஓர் இரவில், எனது முயற்சியே இன்றி, ஓர் எதிர்பாராத தீர்வு எனக்குக் கிடைத்தது.*

*ஆழ்ந்த ஆத்மிக உணர்வு பெற்றிருந்த வாசகர் சிலர் "இதெல்லாம் யதேச்சையாக நிகழ்வதே. இதில் தெய்வீகக் கரங்களால் செயல்படுத்தப்பட்டன என்ற எண்ணுவது அறியாமை" என்று எண்ணலாம். இது ஒரு சௌகர்யமான ஒதுக்கலேயன்றி, அறிவின்பால் பட்டதல்ல. இங்ஙனம் இவையெல்லாம் தற்செயலாக நிகழலாம் என்று கூறும் ஒருவரிடம் நான் கேட்டேன். "இங்ஙனம் தற்செயல் என்பது எத்தகைய நிகழ்வுகளை எல்லாம் குறிப்பிடுகிறது!" அவர் ஒரு தெளிவற்ற விடையையே அளித்தார். அவர் மட்டுமன்றி இத்தகைய "தற்செயல்" வாதிகள் யாருமே ஒரு தர்க்க பூர்வமான விடையை அளிக்க முடியவில்லை. அவர்கள் கூறியதெல்லாம் "இதன் பொருள் எல்லார்க்கும் தெரிந்ததுதானே" என்பதுதான். இதுவரை இதற்கு "தற்செயல்" என்பதின் விளக்கம் எனக்குக் கிடைக்கவில்லை. அதைக் குறித்து நான் கவலைப்படவும் இல்லை.*


# அழகன்னை அன்பினில் கரைந்தாள்

**ரவி & ஸ்ரீதர்**

*"நான் உன்கூட கடைசி வரைக்கும் இருக்கறதுக்காக வந்திருக்கேன். நீ என் உடம்பை இந்தப் புதரில் தூக்கி போட்டாலும் பரவாயில்லை. என் கடைசி மூச்சை உன் மடில தான் விடப் போறேன்". அந்த பெண்மணி இவ்வாறு யாரிடம் கூறினாள்? சாட்சாத் பரமாத்மாவிடம் தான் சொன்னாள் இந்தப் வார்த்தையை! அந்த பரமாத்மா அதற்கு என்ன பதில் உரைத்தார்? என்ன சொல்ல முடியும்? பெண்மணி அந்தப் பரமாத்மாவை பெற்றெடுத்த தாயாராயிற்றே!?*

*அந்த மகனின் ஒரு சில தொண்டர்கள் அவரின் தாய் விருபாக்ஷ குகையில் தங்குவதற்கு அனுமதிக்கவில்லை. தாயை இருக்க அனுமதித்தால் அவள் மகனுக்கு உணவு எடுத்து வரும் எச்சம்மா போன்ற பெண்மணிகளும் குகையில் தங்க அனுமதி கேட்பார்கள் எனப் பயந்தார்கள். எச்சம்மா அதை மறுத்து, தானோ மற்ற ஸ்திரீகளோ குகையில் தங்க வேண்டும் என்று கேட்க மாட்டோம் என்று தெளிவுபடுத்தினார்.*

*ஆயினும் அந்த மகனின் அணுக்கத் தொண்டர்களின் பிடிவாதம் முற்றுப் பெறவில்லை. தாயார் துயரத்துடன் ஒரு நல்ல முடிவுக்காக காத்திருக்க, மகன் மௌனமாகவே வீற்றிருந்தான். குறிப்பாக தொண்டர்களுள் பெருமாள்சாமி என்பவரின் மறுதலிப்பு சற்று உக்கிரமாகவே இருந்தது. அந்த மகன் எழுந்தான். தன்னை பெற்றவளின் கையைப் பிடித்து, "வாம்மா, நம்ம ரெண்டு பேரும் வேறே எங்கேயாவது போயி*



*இருக்கலாம்" என்று நடக்க ஆரம்பித்து விட்டான். அதிர்ச்சியுற்ற தொண்டர்கள் அந்த மகனின் காலில் விழுந்து மன்னிப்பு வேண்டி, தாயார் தங்குவதற்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றார்கள். பகவான், ரமணன், மகரிஷி என்று காவ்யகண்ட கணபதி முனிவரால் நாமம் சூட்டப்பட்ட அந்த மகனும் அவர் தாயார் அழகம்மையும் அன்றிலிருந்து சேர்ந்து வசிக்க தொடங்கினார்கள்.*

*1879 ஆம் ஆண்டில் தன் இரண்டாவது குழந்தையை வயிற்றில் சுமந்து கொண்டிருந்தபோது அந்த 9 மாதங்களும். தான் பூமியையே தன் வயிற்றில்*

சுமப்பதைபோல் உணர்ந்தாள் அழகம்மாள். இத்துணை கனமா தன் இரண்டாவது குழந்தை என வியந்தாள். அழகம்மைக்கு பாவம், அப்போது தெரியவில்லை, அவள் சுமந்து கொண்டிருப்பது, பூமியைத் தன்னுடைய ஒரு மிகச் சிறிய பகுதியாகக் கொண்ட பரப்ரம்மத்தையே தான் என்று. அவளுடைய தலைச்சன் ஆண் குழந்தை என்பதால், அழகம்மா இப்போது விரும்பியது பெண் குழந்தையை. ஆனால் பிறந்ததோ ஆண் மகவு. பெண் பிறந்தால் தன்னுடைய தம்பி பிள்ளைக்கு கல்யாணம் செய்து வைப்பதாக ஏற்கனவே தீர்மானித்திருந்தாள் அவள்.

ஆனால் இது அவளுக்கு நேர்ந்த முதல் ஏமாற்றம் அல்ல. 16 வயதில் அந்த மகன் காணாமல் போனான். 1896 ஆகஸ்டு மாத இறுதியில் வீட்டை விட்டு வெளியேறிய தன் இரண்டாவது மகன் வேங்கடராமனை அழகம்மை சந்தித்தது 2 வருடங்கள் கழித்து, 1898ல்.

திருவண்ணாமலையில் உள்ள பவழக்குன்றில் சாதுவாக சந்தித்த தன் மகனை வீடு திரும்ப வேண்டினாள் அழகம்மை. அப்போது யாருடனும் பேசும் வழக்கம் வேங்கடராமனுக்கு இல்லாததால் ஒரு வார்த்தை கூட தன்னை ஈன்றவளுடன் பேசவில்லை அவன். மகனுக்கு மதுரை வீட்டில் வசிக்க விருப்பம் இல்லாவிட்டால் அருகில் ஏதாவது மடத்தில் இருந்துகொள்ளலாம் எனவும் அவனுடைய வாழ்க்கை முறைக்கு, தானோ மற்றவர்களோ தடையாக இருக்க மாட்டோம் என்றும் அழகம்மை உறுதி அளித்தும் மகன் மசியவில்லை, வாய் திறக்கவில்லை. உடன் இருந்தவர்களின் வற்புறுத்தலின் பேரில் அழகம்மைக்கு 2 வரிகள் எழுதிக் கொடுத்தான் அவளுடைய வேங்கடராமன்.

“அவரவர் ப்ராரப்த பிரகாரம் அதற்கானவன் ஆங்காங்கிருந்து ஆட்டுவிப்பன். என்றும் நடவாதது



பவழக்குன்று ஆலயம்

என் முயற்சிக்கினும் நடவாது. நடப்பது என் தடை செய்யினும் நில்லாது. இதுவே திண்ணம். ஆகலின் மௌனமாய் இருத்தல் நன்று."

பெருத்த ஏமாற்றத்துடன் மதுரை திரும்பினாள் அழகம்மை. அதன் பிறகு இரண்டு முறை தன் இரண்டாவது மகனை திருவண்ணாமலை வந்து பார்த்து விட்டு போனாள். மூன்றாம் முறை 1915ல் அழகம்மை ஒரு தீர்மானத்தோடு தான் அருணாசலம் வந்தாள். அவள் சங்கல்பம் வீண் போகவில்லை. இம்முறை மகன் ஏற்றுக் கொண்டு விட்டான். மூத்த மகனை அதற்குள் இழந்திருந்த அழகம்மை இந்த இரண்டாவது மகனுடன் இருந்து தன் இறுதிக் காலத்தை அருணாசல மலையில் கழித்தாள்.

கந்தசாமி என்ற ரமணரின் அணுக்கத் தொண்டர் ஒருவர் பகவானும் தாயாரும் ஓரளவு சௌகரியமாக வசிப்பதற்கு விருபாக்ஷ குகைக்கு மேல் ஒரு சிறிய ஆஸ்ரமம் நிர்மாணித்துக் கொடுத்தார். கந்தசாமியின் அந்த தூயப் பணியின் காரணமாக பகவானே

அவ்வாசிரமத்திற்கு ஸ்கந்தாஸ்ரமம் எனப் பெயர் சூட்டினார். விருபாக்ஷ குகையிலேயே ஓரளவு சமைக்க தொடங்கியிருந்த அழகம்மை ஸ்கந்தாஸ்ரமத்தில் தன் மகனுக்காகவும் மற்ற சாதுக்களுக்காகவும் சமைப்பதை நிரந்தர வழக்கமாக ஆக்கிக் கொண்டாள். அன்று அவள் ஏற்றிய அடுப்பு இன்றும் ரமணாஸ்ரமத்தில் எரிந்து கொண்டு இருக்கிறது

அக்காலத்துப் பிராம்மண ஸ்த்ரீகள் போல் மிகுந்த ஆசார நாட்டமுடையவளாய் இருந்தாள் அழகம்மை. இது பகவானுக்கு சற்றும் ஆகாத விஷயம் என்பதை அவள் சீக்கிரமே தெரிந்து கொண்டாலும், அவளால் பல வருடப் பழக்கங்களை விட முடியவில்லை. அழகம்மையின் முக்திக்கு இடையூறாக இருக்கும் இந்த நம்பிக்கைளையும் வழக்கங்களையும் அறவே நீக்கிட அவளிடம் கடுமை காண்பிக்க வேண்டி இருந்தது அவள் மகனுக்கு. அன்னைக்கு அது ஒரு கடும் தவமாகவே இருந்தது. பல நாட்கள் அழகம்மை தன் மகனின் வார்த்தைகளால் துன்பப்பட்டாள். அவளுடைய பெரும் நன்மைக்குத்தான், அவளைக் கடைத் தேற்றுவதற்காகத்தான் தன் மகன் அப்படிக் கடுமையாக நடந்து கொள்கிறான் என்பதை நாள்பட அழகம்மை புரிந்து கொண்டாள்.

வந்தது அந்த நாளும். வெள்ளிக்கிழமை 1922-ஆம் வருடம் மே மாதம் 19-ஆம் தேதி. காலையிலிருந்தே அழகம்மைக்கு மூச்சு வாங்கத் தொடங்கியது. 10 மணி வாக்கில் பகவான் தன் தாயாரை மடியில் கிடத்திக் கொண்டு தன் வலது கையை அவளின் மார்பிலும் இடது கையை அவள் தலையிலும் வைத்துக்கொண்டார். அவள் நினைவு தப்பியது. அழகம்மையின் பூர்வ கர்மங்களும் அவள் அனுபவிக்க வேண்டிய கர்மங்களும் அவள் ஆழ்மனதில் ஓடிக் கொண்டேயிருந்தன. அவற்றை எல்லாம் அவள் ஒரு நீண்ட சொப்பனம்போல் கண்டு

*தீர்த்தாள். அவளது மகனின் ஸ்பரிச தீக்ஷையினால் அழகம்மை பிறவி இல்லாப் பேரானந்த நிலை எய்தினாள். காவ்யகண்ட கணபதி முனிவரும் அவர்தம் சீடர்களும் வேத கோஷங்கள் முழங்க, அணுக்க அடியார் மணவாசி ராமஸ்வாமி ஐயர் ராம நாமம் ஜெபிக்க, அழகன்னை அருணாசலமெனும் பேரன்பினில் கரைந்தாள். அப்போது இரவு எட்டு மணி. "ஆயிற்று, எல்லோரும் வாருங்கள் சாப்பிடலாம், தீட்டெதுவும் இல்லை" என்றார் பகவான். தன் தாயாரைக் கடைத்தேற்றி தன்னுள் ஐக்கியமாக்கிக் கொண்டு விட்டார் பரமாத்துமன் அருணாசல ரமணனாகிய அவளுடைய மகன்.*

*அடுத்த நாள் இருள் பிரியும் முன் அழகம்மையின் புனித உடல் மலையின் தெற்கு அடிவாரத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதற்குள் செய்தி அறிந்து நூற்றுக்கணக்கானவர் கூடி விட்டனர். பரப்ரம்மத்தையே பெற்றெடுத்த அந்தப் புனிதவதியின் பூத உடல் பாலிதீர்த்தக் கரையில் அடக்கம் செய்யப்பட்டது. காசியில் இருந்து கொண்டு வரப்பட்ட சிவலிங்கம் அக்கல்லறையின் மேல் ஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு மாத்ருபூதேஸ்வர மஹாலிங்கம் என்று பெயரிட்டார் பகவானின் நெருங்கிய பக்தரான கணபதி முனி. 7 மாதங்களுக்குப் பிறகு 1922 டிசம்பர் மாதத்தில் பகவானும் தொண்டர்களும் அன்னையின் சமாதி அருகே நிரந்தரமாக குடி பெயர்ந்தனர். 27 வருடங்களுக்குப் பிறகு 1949 மார்ச் மாதத்தில் அன்னையின் சமாதி மீது ஓர் அழகிய கோயில் கட்டப்பட்டு ஸ்ரீசக்ரமும் ஸ்தாபிக்கப்பட்டு கும்பாபிஷேகமும் நடத்தப்பட்டது.*

★ ★ ★

*பகவானின் அத்யந்த பக்தையான சூரி நாகம்மா அழகன்னையை, பற்றி தன்னுடைய 'ரமணாஸ்ரமத்திலிருந்து கடிதங்கள்' நூலில் குறிப்பிடுகிறார், "'என் உடலைப் புதருக்குள் வீசினாலும்*

*பரவாயில்லை” என்று அம்மா கூறியது எத்தனை ஒரு மகத்தான வார்த்தை! சரணாகதி என்றால் இப்படி அல்லவா பூரணமாக இருக்க வேண்டும்! அதனால் தானே அவள் சமாதி கோயில் மஹாராஜாக்களும் மந்திரிகளும் தொழும் ஒரு உன்னதத் தலமாக ஒளிர்கிறது!”'*

*கே.கே.நம்பியார் என்ற முதுபெரும் ரமண பக்தர் 1980களில், சென்னையில் தன்னுடைய உரை ஒன்றில் அற்புதமாகக் குறிப்பிடுகிறார்: “என்னை நீ இந்தப் புதரில் தூக்கி வீசினாலும் பரவாயில்லை. உன் மடியில் தான் நான் என் கடைசி மூச்சை விடுவேன்' என்றாள் பகவானிடம். இப்போது நமக்கு தெரியும் எந்த புதருக்குள் தன் தாயை பகவான் வீசி எறிந்தார் என்று!” (Now we know into which bush he threw her. இது தான் கே.கே.நம்பியாரின் ஆங்கில வர்ணனை)*

★ ★ ★

*‘அம்மா, நீ பகவானை எங்களுக்கு தந்தாயா அல்லது பகவான் உன்னை எங்களுக்குத் தந்தாரா?' எங்களுக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகத் தெரிகிறது. உன் பரிபூர்ண அனுக்கிரகம் உன் பிள்ளையின் பக்தர்களாகிய எங்களுக்கு எப்போதும் உண்டு. அப்படியே உன் பிள்ளையின் அருளையும் எங்களுக்கு வாங்கிக் கொடு. அன்று ஸ்கந்தாஸ்ரமத்தில் உன் பிள்ளை சொல்படி நீ கேட்டு நடக்க வேண்டி வந்தது. இப்போது நீ சொன்னால் உன் பிள்ளை கேட்பான்.*

★ ★ ★

**ரமணோதயம்**

Voluntary Services

K. சுரேஷ் ஜானகிராமன் 9444127770

ராஜேஷ் M.S. 9840075778



மாத்ருபூதேஸ்வரர் ஆலயம், ஸ்ரீ ரமணாஸ்ரமம்

# அழகன்னை அன்பினில் கரைந்தாள்

## ***மணவாசி ராமஸ்வாமி ஐயர்****

*வசந்தா ராகம்* *ஆதி தாளம்*

*பல்லவி*

*அழகன்னை அன்பினில் கரைந்தாள் புகழடைந்தாள்*
*திருவருணையில் (அழகன்னை)*

*அனுபல்லவி*

*தழல் மெழுகென தன்னை தானான ரமணனை*
*தனயனாய் பெற்ற பெரும் புண்ணியவதியான*
*(அழகன்னை)*

*சரணம் 1*

*வினைச்சுழி தனை தவிர்க்கும் திருச்சுழி கொளிவிளை*
*உயர்குல வேதியன் சுந்தர குமரனை*
*தானோ கட்டழகி கணவனோ சுந்தரன்*
*தன் மகன் ஒளியினை தானே கண்டுவந்திட்டாள்*
*(அழகன்னை)*

*சரணம் 2*

*தலைமுறை தவறாது தத்துவ ஞானியர்*
*குணவதி உத்தமி தழைத்திடும் குலமது*
*தவம் பழுத்துதிர்ந்திட தரணியில் இறங்கிய*
*ப்ரேமையே உருவான அபிராமி என் தாயாம்*
*(அழகன்னை)*

*சரணம் 3*

*உயர்ந்து தாரகம் இரவதில் கோஷிக்க*
*உலகாசிரியன் ஹஸ்தத்தால் ஆகர்ஷிக்க*
*துந்துபி வைகாசி பஹுள நவமியதில்*
*தொண்டர்கள் பலர் சூழ தழுதழுத்திட எங்கள்*
*(அழகன்னை)*

---

**மணவாசி ராமஸ்வாமி ஐயர் பகவானின் தாயார் அழகம்மை அருணாசலத்தில் அடங்கியபொழுது பகவான் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவள் மேல் இயற்றிய பாடல்.*

# கூப்பிடும் தூரத்தில் குரு ரமணர்

**பிர. கிரிதர ஜெகதீஷ்**


*ரமணம் என்பதற்கு மகிழ்ச்சி என்பது பொருள்.*

*இஷ்டார்த்த ஸம்யோக ஜா க்ரீடா*

*விருப்பமான பொருள்களுடன் சம்பந்தம் வைக்கும்பொழுது வருகிற மகிழ்ச்சி.*

*மகிழ்ச்சி என்றால் ரதி, இன்பம். இன்பவுணர்வுக்கு மானஸ உல்லாஸ:! மனதிலுள்ள குதூகலம் என்று விளக்கம் தரலாம்.*

*விரும்பிய பொருளோடு சேர்ந்தால்தான் இன்பம் வரும். அவ்விதம் சேரவில்லையென்றால் துன்பம் வரும். இதைத்தான் சாஸ்த்ரங்கள் ஸம்ஸாரம் என்று அழைக்கின்றன. ஸம்ஸாரம் என்பதற்கு மனதிலுள்ள அபூர்ணத்வம், திருப்தியின்மை என்பது பொருள். நாம் விரும்புகிற மனிதர்கள், பொருள்கள், சூழ்நிலைகள் என்பன எல்லா நேரத்திலும் நமக்குக் கிடைக்கும் என்று யாராலும் உறுதிப்படுத்த முடியாது. அது நம்முடைய கர்ம பலத்தைப் பொறுத்தது. நம்முடைய அண்டை வீட்டுக்காரர் மிகவும் நல்லவராக இருப்பார். நட்புடன் பழகுவார். ஆனால் சற்று முன் கோபியாக இருப்பார். எனவே அவருடன் நம்மால் சகஜமாக பழக முடியாது. இன்னொரு நண்பர் இருப்பார். மிகவும் இனியவர். பொறுமையான வடிவானவர். ஆனால் நம்மை விட்டு மிகவும் தூரத்தில் இருப்பார். எனவே அவரோடு நேரில் கலந்து அளவுளாவுதல் என்பது அசாத்தியம். ஏதோ செல்போனில் சிறிது நேரம் பேசலாம். பக்கத்தில்*



அமர்ந்து, கண்கள் பார்த்து, உள்ளம் கலந்து பேசுவதற்கு நல்ல மனிதர்கள் வேண்டும். ஆனால் அதுபோன்று ஒரு உறவு, நட்பு கிடைக்க வேண்டுமானால் அதற்கு கர்ம பலன் வேண்டும். முன்ஜென்மத்தில் அல்லது இப்பிறவியிலாவது தவம் செய்திருக்க வேண்டும்.

இன்றைய உலகம் கொரோனா உலகமாக இருக்கிறது. சமூக இடைவெளி, வாய்ப்பூட்டு, யாரையும் நெருங்கக் கூடாது. கிட்டத்தட்ட எல்லோருமே வீட்டுச் சிறையில் இருக்க வேண்டிய நிலை.

**தனிமையில் பயம் இல்லை. ஆனால் மகிழ்ச்சி இல்லை. தனிமையில் கவலை இல்லை. ஆனால் மகிழ்ச்சி இல்லை. அதுவே துயரமாகி விடுகிறது.**

குழந்தைக்கு உடல்நிலை சரியில்லையென்றால் அழும். அல்லது பசி, தூக்கம் வந்தால் அவைகளை வெளிப்படுத்தும் முகமாக அழும். மற்றபடி ஸம்ஸாரத் துயரத்தால் குழந்தை அழுமா என்றால் இப்பொழுது அதற்குரிய சூழ்நிலை என்பது இல்லை. குழந்தை வளர்ந்து அஹங்காரம் பெரிதானதும் சம்ஸாரத் துயரத்தை அப்பொழுதுதான் சந்திக்கும். குழந்தை அழும்பொழுது அதனுடைய கூக்குரலுக்கு யார் வருவார் என்றால் அதனுடைய தாய் வருவாள். குழந்தை சிணுங்குவது முதற்கொண்டு முறுக்கி அழுது அடம் பிடிப்பதுவரை அதனுடைய உள்நோக்கம் என்ன? எதைக் கொடுத்தால் குழந்தை அழுகையை நிறுத்தும் என்பது பெற்றவர்களுக்குத்தான் தெரியும். இனி, ஸம்ஸாரத் துயரத்தால் ஜீவர்கள் அழும்பொழுது ஓடோடி வரும் தாயாக இறைவன் இருக்கிறார். குரு ரூபத்தில் அறிவு ஊட்டும் தாயாக குருவானவர் விளங்குகிறார். தம்மை இதயப்பூர்வமாக நாடிவரும் அடியார்களின் குறையைப் போக்க, கூப்பிடும் தூரத்தில் குரு ரமணர் இருக்கிறார்.

மோக்ஷத்தை இருவிதத்தில் கூறலாம்.

1. துக்க நிவிர்த்தி மோக்ஷம்
2. சுகப்ராப்தி மோக்ஷம்

நம்மிடமுள்ள ஏதாவது ஒன்றை அழிப்பதுதான் துக்க நிவிர்த்தி மோக்ஷம். நம்மிடமுள்ள ஏதாவது ஒன்றை விட்டு விடுவது மோக்ஷம் என்று கருதப்படுகிறது. தரிதி சோகம் ஆத்மவித் ஆத்மாவை அறிந்தவர்கள் சோகத்தைக் கடக்கிறார்கள் என்று சாஸ்த்ரம் சொல்கிறது.

இனி, சுக ப்ராப்தி மோக்ஷம் என்றால், ஏதாவது ஒன்றை அடைவது மோக்ஷம் என்று கருதப்படுகிறது. இப்பொழுது நம்மிடம் இல்லாத ஏதோ ஒன்றை அடைவது மோக்ஷம் என்று சொல்லப்படுகிறது. தேஷாம் சுகம் சாச்வதம் என்று சாஸ்த்ரங்களில் மோக்ஷம் என்பது ஒன்றை அடைவதைப்

போலவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்றிலிருந்து விடுபடுவது போலவும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, அஹங்காரத்தை விடுவது மோக்ஷம் என்று சொல்லலாம். அல்லது பூர்ண மனதிருப்தியை அடைவது மோக்ஷம் என்றும் சொல்லலாம்.

பகவான் ரமணருடன் அன்பர் ஒருவர் மோக்ஷத்தை குறித்து நடத்தப்பட்ட சம்வாதத்தைப் பார்ப்போம்.

கேள்வி: மோக்ஷம் அடைய என்ன செய்ய வேண்டும்?

பகவான்: முதலில் மோக்ஷம் என்பது என்னவென்று பார்ப்போம்.

கேள்வி: அதற்கு உபாஸனை என்பது அவசியமா?

பகவான்: உபாஸனையின் மூலமாக மனோநிக்ரகமும், சித்த ஏகாக்கிரதையும் உண்டாகும்.

கேள்வி: மூர்த்தி உபாஸனை செய்யலாமா?

பகவான்: உடலை நான் என்று நினைக்கும்வரை மூர்த்தி உபாஸனை வேண்டியதே.

கேள்வி: ஜனன, மரணத்தைக் கடப்பது எப்படி?

பகவான்: ஜனன, மரணங்கள் என்னவென்று தெரிந்து கொண்டால் போதும்.

கேள்வி: மோக்ஷம் அடைய குடும்பத்தைத் துறக்க வேண்டுமா?

பகவான்: உன்னை நீ தெரிந்துகொள். அவர்களால் உனக்கு என்ன கெடுதல்?

கேள்வி: ஸம்ஸாரத்தைத் தியாகம் செய்ய வேண்டுமா?

பகவான்: ஸம்ஸாரம் என்றால் என்னவென்று தெரிந்துகொள். ஸம்ஸாரம் என்பது மனைவி, மக்களா?

மனைவி மக்களோடு வாழ்ந்தவர்கள் ஞானத்துடன் விளங்கியதைக் கேள்வியுற்றது இல்லையா?

கேள்வி: ஞானம்பெற நேரே அனுஷ்டிக்க வேண்டிய சாதனங்கள் எவை?

பகவான்: கேட்பவனது பரிபாகத்தையும், நிலையையும் அனுசரித்தே அவற்றைச் சொல்ல வேண்டும்.

மேற்கண்ட உரையாடல்களிலிருந்து நாம் சேகரித்த விஷயங்கள் மூன்று.

1. ஸம்ஸாரம் என்பது ஒருவனுக்கு வெளியில் இல்லை. மனதில் அனுபவிக்கப்டும் நிறைவின்மைக்கு ஸம்ஸாரம் என்று பெயர்.

2. மோக்ஷம் என்பதும் ஒருவனுக்கு வெளியில் இல்லை. மனதில் அனுபவிக்கப்படும் முழு நிறைவுக்கு மோக்ஷம் என்று பெயர்.

3. ஞானமடைவதற்குத் தேவையானது மனப் பரிபாகமேயன்றி இல்லறம் அல்லது துறவறம் என்பன அல்ல.

பகவான் ரமணரின் முதல் உத்தரவு, மோக்ஷம் என்றால் என்ன என்று பார். இது குறித்து சிறு விசாரம் தேவைப்படுகிறது.

பிருஹதாரன்யஹ உபநிஷத்தில், ஸவை னைவரேமே, தஸ்மாத் ஏகாகி நரமதே ஸ: த்விதீயம் ஐச்சத்.

அந்த ஹிரண்ய கர்ப்பனுக்கு (சதுர்முக பிரம்மாவுக்கு) அவரைத் தவிர வேறு யாரும் இல்லாததால் சந்தோஷம் இல்லை. ஆகவே தனிமையில் மகிழ்ச்சியாக இல்லாத காரணத்தால் அவர், த்விதீயம் ஐச்சத் இருமையை விரும்பினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக,

*மகிழ்ச்சியின்மை, திருப்தியின்மை அதுதான் பந்தம். பிறகு, மகிழ்ச்சி, முழு மனதிருப்தி அதுதான் மோக்ஷம்.*

*மனிதர்கள் பொதுவாகத் தனிமையை விரும்புவார்கள் அல்லது இருமையை விரும்புவார்கள். எனக்கு யாரும் வேண்டாம். தனிமையில் இருக்க விரும்புகிறேன் என்று சொல்வது அறியாமை. இனி, எனக்கு பிடித்தவர்களுடன் இருக்க விரும்புகிறேன் என்று இருமையை விரும்புவதும் அறியாமையே.*

*தனிமையில் மகிழ்ச்சி இல்லை. இருமையில் சலிப்பு வந்து விடுகிறது. இதுதான் ஸம்ஸாரம்.*

*பிரம்மத்திடம் தனிமையும் இல்லை. இருமையும் இல்லை. எனவே பிரம்மம் நிறைவாக பூர்ணமாக இருக்கிறது. ஜீவர்களாகிய நாமும் நம்மைத் தனிமைக்கும், இருமைக்கும் அப்பாற்பட்ட தத்துவமாகப் புரிந்து கொண்டால் நாமும் பிரம்மத்தைப் போல பூர்ண ஸ்வரூபமாக இருக்கலாம்.*

*தனிமை அல்லது இருமை என்பன எதனால் வருகிறது என்பது கேள்வி. என்னை நான் கர்த்தாவாகவும், போக்தாவாகவும் கருதுவது தான் தனிமை அல்லது இருமை என்ற ஸம்ஸாரத்திற்கும் காரணம். கர்த்தா என்பதற்குச் செயலைச் செய்பவன் (The Doer) என்பது பொருள். போக்தா என்பதற்கு செயலின் பலனை அனுபவிப்பவன் (The Enjoyer) என்பது பொருள்.*

*நான் போக்தாவாக இருக்கும்போது போக்தாவாகிய எனக்கு அனுபவிக்கப் பொருள் வேண்டும். அனுபவிப்பவன் மட்டுமே இருந்து அனுபவிக்கப் பொருள் இல்லையென்றால் போக்தாவாகிய நான் துக்கியாக இருப்பேன். அதே போக்தாவாகிய நான் அஹம் பிரம்மாஸ்மி என்று புரிந்தவனாக இருந்தால் ஜீவன் முக்தனாக இருப்பேன். அதாவது நான் பசியாக இருக்கிறேன். சாப்பாடு இல்லை. எனவே எனக்கு*

*ஸம்ஸாரத் துயரம் வருகிறது. இனி, நன்றாகச் சாப்பிட்டு திருப்தியாக இருக்கும் எனக்கு, சாப்பாடு இல்லை என்று யாராவது கூறினால் அந்த நேரத்தில் அந்த சொல் எனக்கு ஸம்ஸாரத்தைக் கொடுக்காது. ஆக, தனிமையில் துயரம், இருமையில் சலிப்பு என்பன எனக்கு வரக்கூடாது என்றால் என்னால் இரண்டு காரியங்கள் செய்யப்பட வேண்டும்.*

*1. போக்தாவாகிய எனக்குத் தேவையான போக்கியத்தைக் கொடுத்தால் துயரம் என்கிற ஸம்ஸாரம் வராது. இது எல்லா நேரத்திலும் நடக்காது. போக்யம் அனுபவிக்கத் தேவையான பொருள்கள், மனிதர்கள் என்பன பிராரப்தக் கர்ம பலனை அனுசரித்தே கிடைக்கும். அப்படியே கிடைத்தாலும் அவைகளும் ஒரு கட்டத்தில் சலித்து விடும். எனவே போக்யம் என்பது தற்காலிகமான சுகத்தை மட்டுமே கொடுக்கும்.*

*2. இனி, சலிப்பும் துயரமும் எனக்கு வரக்கூடாது என்றால், என்னால் செய்யப்பட வேண்டிய முக்கியமான வேலை, நான் போக்தாவாக இல்லாமல், கர்த்தாவாகவும் இல்லாமல் சாக்ஷியாக இருத்தல். எனக்கு எந்த போக விஷயமும் தேவையில்லை. என்னை என்னைத் தவிர வேறு எதுவும் திருப்திப்படுத்த முடியாது என்று உணர்ந்திருந்தால் எனக்குத் தனிமையும் தேவையில்லை. இருமையும் தேவையில்லை. அதன் விளைவாக எனக்குத் துயரமும் இல்லை, சலிப்பும் இல்லை என்ற மனநிறைவோடு இருப்பதுதான் ஜீவன் முக்தி.*

*இதை பகவான் ரமணர் தமது அருள் மொழியில்,*

*நான் என்னும் அகந்தை தூக்கத்தின்போது இல்லை. விழிப்புற்றதும் அதுவே தேக ஆகாரமாகத் தோன்றி பற்பல நினைப்புகளாக உருவெடுக்கிறது. இவ்வாறு தேஹம் மற்றும் உலகங்களுடன் சம்பந்தப்பட்டு இயங்குவதே அஹம் விருத்தி எனப்படும். அஹம்*

*விருத்தி என்பது ஆத்மா ஒன்றையே தான் என்ற புரிந்து கொண்டு விளங்குங்கால் அதுவே 'அகஸ்புரணம்' எனப்படும் என்று கூறுகிறார்.*

*ரமண மொழியைப் புரிந்து கொள்பவர்களுக்கு பகவான் ரமணர், அவர்கள் கூப்பிடும் தூரத்தில்தான் இருக்கிறார். பகவானது அருள் அவர்களுக்கு எப்பொழுதும் இருக்கும்.*

---

# இனிவரும் திருநாட்கள்

## 2021

| | | | |
|---|---|---|---|
| *செப்டம்பர்* | 1 | *செவ்வாய்* | *பகவான் அருணையடைந்த தினம்* |
| *அக்டோபர்* | 7 | *வியாழன்* | *நவராத்திரி விழா தொடக்கம்* |
| | 14 | *வியாழன்* | *சரஸ்வதிபூஜை* |
| | 15 | *வெள்ளி* | *விஜயதசமி* |
| *நவம்பர்* | 4 | *வியாழன்* | *தீபாவளி* |
| | 10 | *புதன்* | *கார்த்திகை தீபோற்சவம் துவக்கம்* |
| | 19 | *வெள்ளி* | *கார்த்திகை தீபம்* |
| *டிசம்பர்* | 21 | *செவ்வாய்* | *பகவானது 142ஆவது ஜயந்தி* |

# பரமனின் பல்வேறு பரிமாணங்கள்

**டாக்டர். ஏ.வி.ராஜகோபாலன்**

*பரமன் தன்னைப் பலவிதமாக பக்தர்களுக்கு வெளிப்படுத்திக் கொள்கிறான். பக்தன் எந்த வகையில் அந்தப் பரம்பொருளைக் காண விரும்புகிறானோ அவ் விதங்களிலெல்லாம், அவன் அவர்களுக்குக் காட்சி அளிக்கிறான். இது அவனுடைய எல்லையில்லாக் கருணையின் காரணமாக அமைகிறது. இதை திவ்யப் பிரபந்த்த்தின் முதல் திருவந்தாதியில் பொய்கையாழ்வாரின் பாசுரமாகப் பார்க்கலாம்.*

*தமர் உகந்தது எவ்வுருவம், அவ்வுருவம் தானே;*
*தமர் உகந்தது எப்பேர் மற்று அப்பேர் தமர் உகந்து*
*எவ்வண்ணம் சிந்தித்து இமையாது இருப்பரே*
*அவ்வண்ணம் ஆழியான் ஆம். 2125*

*அவனுக்கு உகந்த உருவம் கொண்டு, அவன் சொல்லும் நாம வடிவாக இறைவன் பக்தர்களுக்கு அருள்பாலிப்பது மெய் சிலிர்க்க வைக்கும் அநுபவம். பரமன் இல்லாது பக்தன் இல்லை; பக்தன் இல்லாது பரமன் இல்லை என்னும் அற்புதப் பிணைப்பே இதற்குக் காரணம். அதனாலேயே அவன் எளிவந்த பிரான் ஆகிறான்.*

*வேதங்களில் உருவம் படைத்த 'சாகார' வழிபாடு காணப்படுவதில்லை. ஆனால் இறைவனை அவர்கள் மிக நெருங்கியவனாக பார்த்தார்கள். அவற்றை நோக்கினால் வேதகாலத்து ரிஷிகள் எந்த அளவுக்கு*

*இறைவனுடன் நெருங்கிய உறவு பாராட்டினார்கள் என்பது புரிய வருகிறது. உதாரணத்திற்கு ருக் வேதத்தின் பத்தாவது மண்டலத்திற்குள் பிரவேசிப்போம். ஒரு தாய் குழந்தையை அணைத்து முத்தமிடுகிறாள். அதே பாசத்துடன் குழந்தையும் தாயை அணைத்து முத்தமிடுகிறது. இந்த அன்புப் பிணைப்பில் ஒரு எளிய உள்ளம் மிக நெருக்கத்தில் இறைவனைக் காண்கிறது.*

***தம் பாகேன மனசாபஸ்யம் அந்தித: | ருக் 10.114.4.2***

*இந்த அற்புத விளக்கத்தின் வெளியீடாகவே நம்மால் ஞானசம்பந்தக் குழந்தையைப் பார்க்க முடிகிறது. பெரியாழ்வாரும் குலசேகரப் பெருமானும் பின்னர் கண்ணனைப் பாடுகையில் இந்த நெருக்கம் அற்புதமாக வெளிப்படுகிறது. வேதம் கண்ட இந்த உறவு வழி அன்பு மயமான ஒரு மார்கத்தின் ஆரம்பமாக அமைந்திருக்கிறது. மற்றோரிடத்தில் ஒரு குழந்தை தந்தையின் உடையைப் பற்றுவது போல இறைவனை அதே உரிமையுடன் பார்க்கிறார்கள். இந்த முறையில் இறைவனைத் தாய்தந்தையராக, உறவினனாக, நண்பனாக, சகோதரனாக பார்க்கின்ற காட்சியை ரிக்வேதத்தில் பல இடங்களில் காண முடிகிறது*

***அக்னிம் மன்யே பிதரம் அக்னிம் ஆபிம் அக்னிம் ப்ராதரம் சதமித் சகாயம்| 10.7.3***

*இந்தக் கடலில் மேலும் புகுந்து முத்தெடுக்க வாய்ப்பு இருக்கிறது.*

*கங்கை சமவெளியில் இந்துமதம் பரவத் தொடங்கிய பொழுது இறைவனை மும்மூர்த்திகளாகப் பார்க்கின்ற சித்தாந்தம் துவங்கியது. இதிஹாச புராணங்கள் மூலமாக நாமரூபகுணங்கள் கொண்ட தெய்வ வழிபாடு பரவியது. பின்னர் அது பாரத மண்ணில் வேரூன்றி, குறிப்பாக தமிழ் நாட்டில் பெருமளவில் பேசப்பட்டது. இந்தச் சூழலில்தான் இறைவனைக் காணுதல் என்பது ஒரு மாறுபட்ட பரிமாணத்தில் பார்க்க முடிகிறது.*

*சைவ மதத்தில் தடுத்தாட் கொள்ளுதல் என்னும் இறையருள் புகழ் பெற்றது. பக்தனை ஒரு சோதனைக்கு உட்படுத்திய பின் இறைவன் அவனுக்குத் தன்னை வெளிப்படுத்துகிறான். இதற்கு பல அழகிய உதாரணங்களைப் பார்க்கலாம் குழந்தை ஞானசம்பந்தர் சீர்காழியில் (அக்காலத்தில் அது பிரமபுரி என்று அழைக்கப்பட்டது) ஒரு கோயில் குளத்தின் படிகளில் பசியால் அழும் பொழுது உலகத்தின் தந்தையும் தாயுமாகிய சிவனும் பார்வதியும் அவருக்கு காட்சியளிக்கின்றனர். திருநாவுக்கரசருக்கு, குணப்படுத்த முடியாத வயிற்று நோயை உண்டாக்கி இறைவன் தடுத்தாட்கொள்கிறான். தம்பிரான் தோழர் என்று இறைவனுக்கு உற்ற நண்பராகப் பார்க்கப்பட்ட சுந்தரமூர்த்தி சுவாமிகள் அவருடைய திருமண நாளில் ஒரு முதியவருடன் வாதத்தில் தோற்கடிக்கப்பட்டு இறுதியில் இறைவனால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார். 'பித்தனோ' என்று சிவபெருமானை அழைத்ததால் 'என்னைப் பித்தன் என்றே பாடுக' என்று அடி எடுத்துக் கொடுக்கிறார் பிறைசூடிப் பெம்மான்.*

*இந்த மூவருக்கும் பின்னர் பல சமயங்களில் இறைவன் காட்சியளிக்கிறான். சுந்தரர் பெற்ற அனுபவம் சுவையானது. திருமழபாடி என்னும் தலத்தின் வழியாக அவர் அடியார் குழாத்துடன் சென்று கொண்டிருக்கிறார். அப்போது 'சுந்தரம் என்னை மறந்தாயோ?' என்ற குரல் ஆகாயத்தில் கேட்க, வியப்புடன் சுற்றுமுற்றும் பார்க்கிறார். கூட இருந்தவர்கள் அங்கு ஒரு பாழடைந்த நிலையில் ஆலயம் ஒன்று உண்டு என்று தெரிவிக்கிறார்கள். அங்கு போய்ப் பார்க்கிறார். புழுதி படிந்த நிலையிலே ஒரு சிவலிங்கத்தைக் காண்கிறார். ஆனால் பக்தியிலே பழுத்துப் போன அந்த உன்னத சிவனடியார்க்கு அது ஒளிமயமான விக்கிரகமாகவே தோன்றியது. 'பொன்னார் மேனியனே புலித்தோலை அரைகசைத்து மின்னார் செஞ்சடைமேல் மிளிர்*

*கொன்றை அணிந்தவனே' என்று பாட ஆரம்பிக்கிறார். அந்தப் பாழடைந்த சூழலில் சிவனுடைய ஒளிமயமான ஜோதியே அவருக்கு முன் தெரிகிறது. மற்றவர்களுக்கு அது கிடைப்பதில்லை. இதுவே உயர்ந்த இறையுணர்வு.*

*இதேபோல, நாவுக்கரசரின் அனுபவம் நமக்குப் பல சுவையான தத்துவப் படிப்பினைகளை அளிக்கிறது. வயதான காலத்தில் கைலாய யாத்திரையைத் தொடங்குகிறார் இந்த தொண்டர். முதுமை காரணமாக அவரால் பயணத்தைத் தொடர இயலவில்லை. அப்பொழுது ஒரு முதியவர் அவர் முன் தோன்றி 'அந்தக் குளத்தில் குளித்து வாருங்கள்' என்று பணிக்கிறார். நீரில் மூழ்கிய அப்பெருந்தகை, திருவையாறு ஆலயத்தின் திருக்குளத்திலே கரையேறுகிறார். சற்று ஏமாற்றம்தான். ஐயாரப்பன் ஆலயத்தை நோக்கிச் செல்கிறார். வழியில் உள்ள சோலையில் பறவைகளும் விலங்குகளும் ஆணும் பெண்ணுமாக ஜோடியாக செல்வதை இந்த எளிய பக்தர் காண்கிறார். ஞானம் உதயமாகிறது.*

***காதல் மடப்பிடியோடும் களிறு வருவனக் கண்டேன்***
***கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதனக் கண்டேன்***

*இந்தப் பிரபஞ்சமே இறைவனின் வடிவம்; அனைத்து ஜீவராசிகளும் அவனுடைய அம்சமே என்ற மிக உயர்ந்த தத்துவ அறிவை பெறுகிறார். ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதனக் கண்டேன்.' என்று தத்துவ முத்திரை பதிக்கிறார்.*

*இந்த உலகமே இறைவனின் வழிபாடு, அதில் உள்ள எல்லா ஜீவராசிகளுள்ளும் அவன் இருக்கிறான் என்ற கருத்தை இந்த அரிய நிகழ்வு, நமக்கு விளக்குகிறது. இதன் மூலம் பார்த்தால் நமக்கு யஜுர் வேதத்தில் வரும் ருத்திரம் என்ற அத்தியாயத்தின் பொருள் நன்கு விளங்கும். அதில் இறைவன் நிற்பவனாக, அமர்ந்து இருப்பவனாக, ஓடுபவனாக, திருடனாக,*

அற்பத்திலும் அற்பமானவனாக இவ்வாறு பல வடிவில் வணங்கப்படுகிறான்.

புரிவதற்கு சற்றுக் கடினமாக தோன்றும் இந்த தத்துவத்தின் எளிய விளக்கத்தை வாகீசரின் பாடலில் காண்கிறோம். தீயவர் நல்லவர், உயர்ந்தது, தாழ்ந்தது என்ற வித்தியாசங்கள் இறைவனின் திருச்சபையில் இருப்பதில்லை. அதனால்தான் ரமணர் ஒரு பசு, குரங்கு, அணில் போன்ற பல படைப்புகளிலும் இறைவனையே கண்டார். சமய வேதாந்தக் கட்டமைப்பில் இருந்து வெளியே வந்து பார்த்தால் இது சுவையான சமத்துவ உணர்வாகவும் நமக்குத் தெரிகிறது.

பக்தர்கள் இறைவனை காண்பது ஒரு புறம் இருக்க, இறைவனே பக்தர்களை காண விரும்பி வருகின்ற கெழுமிய காட்சியைப் பல இடங்களிலும் பார்க்கிறோம். திருக்கோவிலூர் என்னும் தலத்திலே ஒரு மழை கொட்டும் இரவில் மூன்று ஆழ்வார்கள் ம்ருகண்டு மகரிஷியின் ஆசிரமத்தில் ஒரு குறுகிய இடைகழியில் ஒன்று சேர்கிறார்கள். அவர்கள் இருப்பதற்கே அங்கு இடம் போதவில்லை. அப்பொழுது கருணா மூர்த்தியான இறைவன் அவர்களைக் காண தன்னுடைய பாற்கடலின் சுக நித்திரையிலிருந்து புறப்பட்டு அங்கு வந்து சேருகிறான். அப்பொழுது அந்த இருளில் வந்தவனைக் காண பொய்கை ஆழ்வார் உலகே தளியாக, கடலே நெய்யாக, ஞாயிறெ விளக்காகக் கொண்டு ஞான தீபம் ஏற்றுகிறார். அதைத் தொடர்ந்து பூதத்தாழ்வார் அன்பும் ஆர்வமும் இன்பு உருகு சிந்தையும் ஒன்று கூடிய ஒரு ஆத்ம தீபத்தை உருவாக்குகிறார். இவ்வாறு உள்ளும் புறமும் ஒன்றிணைந்து ஞானஜோதி பிரகாசித்த அந்த நல்ல வேளையிலே பேயாழ்வார் இறைவனின் திருக்காட்சியைக் காண்கிறார்.

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்;
திகழும் அருக்கன் அணி நிறமும் கண்டேன்

*செருக்கிளரும் பொன் ஆழி கண்டேன்*
*புரி சங்கம் கைக்கண்டேன்....*

என்று அந்த காட்சியை கண்ட பங்கினை ஐந்து முறை 'கண்டேன்' என்ற சொல்லைக் கொண்டு விளக்குகிறார். உள்ளத்தில் பொங்கும் அன்பினால் ஏற்படும் ஆனந்தக் களியாட்டம்.

இந்தக் 'கண்டேன்' என்ற சொல்லை பூதத்தாழ்வார் இன்னும் அழகுபடுத்தி விரிவுபடுத்தி சொல்லுகிறார் 'நான் அவனை எப்பொழுது கண்டேன் தெரியுமா, அவனை நான் பகலில் கண்டேன் இரவில் கனவில் கண்டேன் மீண்டும் மீண்டும் அவனையே கண்டேன்' என்று எளிய சொற்களில் தன் உள்ளப் பாங்கினை உரைக்கிறார்.

*பகல் கண்டேன்; நாரணனைக் கண்டேன்; கனவில்*
*மிகக் கண்டேன் மீண்டும் அவனை, மெய்யே;*
*மிகக் கண்டேன்...*

மிகக் கண்டேன் மீண்டும் அவனை, மெய்யே; மிகக் கண்டேன்எனும் இவ்வரிகள் அந்த் ஆழ்வாரின் அற்புத அநுபவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன!!

இறைவன் பாற்பட்ட அடியார்களின் அனுபவத்தை நோக்கும் பொழுது ஒரு உள்ளத்தைத் தொடும் ஒற்றுமை காணப்படுகிறது. சிவபெருமானின் திருப்பாதத்தைக் கண்டதை 'கண்டேன்' என்ற சொல்லை திரும்பித் திரும்பி வாகீசர் சொல்லி வலியுருத்தியது போல ஆழ்வார்களும் அதே சொல்லை மீண்டும் மீண்டும் பயன்படுத்தி தங்களுடைய பக்தி அனுபவத்தை வெளிக் காட்டுகிறார்கள். எங்கும் எதிலும் அவனைக் காண்பது என்பது உயர்ந்த பக்தியின் வெளிப்பாடு. ஸ்ரீரங்கத்து வீதிகளில் சிறு குழந்தைகள் மண்ணால் ஒரு மலைபோல உருவத்தை செய்து விளையாடும் பொழுது, அங்கு வந்த இராமானுஜருக்கு அது திருப்பதி மலை யாகவே காட்சியளித்தது. பாரதி, காக்கை சிறகினிலே அவன்

கரிய நிறத்தையும், பார்க்கும் மரங்களிலெல்லாம் அவன் பச்சை நிறத்தையும், கேட்கும் மொழியிலெல்லாம் அவனுடைய கீதத்தையும் காண்கிறான்.

சேரநாடு தந்த ஆழ்வார் பெருமான் குலசேகரர் ஆவார். இவர் ஒருவருக்குத்தான் பெருமாள் என்று நாமம் உண்டு. பலம் பொருந்திய சேரநாட்டை வெறுத்து இந்த சீரிய பக்தர் ஸ்ரீரங்கத்திற்கு வந்து அங்கு பள்ளிகொள்ளும் பெருமானைக் காண்பதையே தன் வாழ்வின் பயனாகக் கொண்டவர்.

திருவரங்க பெரு நகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையால் அடி வருடப் பள்ளிகொள்ளும்
கருமணியைக் கோமளத்தைக் கண்டுகொண்டு என்
கண்ணிணைகள் என்று கொலோ களிக்கும் நாளே (647)

இறைவனை காண்பது மட்டும் இந்த பக்தனின் நோக்கமல்ல. அந்த அரங்கனை வாழ்த்தி அவன் மேல் சிந்தையைப் பதித்து அயர்வு எய்தும் மெய்யடியார்களைக் காண்பதே கண் படைத்த பயன் என்பது இவர் கருத்து.

ஆனால் எல்லா இடங்களிலும் இந்தக் காணுதல் என்னும் உணர்வு மிக எளிமயாக அமைவதில்லை. வேதத்தில் ஒரு இடத்தில் சற்று கடினமான ஒரு விளக்கத்தை காண்கிறோம். இதில் வாக் தேவியைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. இதைப்பற்றி கூறுகையில் வேதத்தின் தலைசிறந்த உரையாசிரியரான சாயணர் என்பவர் இந்த ருக் (மந்திரம்) பரப்பிரம்மத்தையே குறிக்கின்றது என்ற கருத்தை வெளிப்படுத்துகிறார். இதில் உள்ள கருத்துக்கள் முதல் நோக்கில் புலனாவதில்லை. ‘பார்ப்பவன், பார்ப்பதில்லை; கேட்பவன் கேட்பதில்லை. மற்றொருவனுக்கு தேவி தன்னுடைய அழகிய வடிவத்தை, அன்புடைய மனைவி அழகிய உடைகள் அணிந்து தன்னை கணவனுக்கு அளிப்பது போல் தந்து விடுகிறாள். (ருக்.10.71.4).

*அழகான கருத்து. இது ஒன்றுக்கு மேற்பட்ட விளக்கங்களை அளிக்கிறது. குறிப்பாகப் பரம்பொருளை அறிதல் என்பது சிலருக்கே கிட்டும்; அது எல்லோருக்கும் சாத்தியமல்ல என்ற குறிப்பு தெளிவாகிறது. வேத காலங்களில் நாம, ரூப, குணங்கள் அற்ற ஒரு உயர்ந்த இறைவனை அவர்கள் மிகுந்த அன்புடனும் கண்டு கொண்டார்கள் என்பது வெளிப்படை.*

*இந்தக் 'காணுதல்' என்னும் அருள், இறைவனிடம் உள்ளத்தை வைக்காதவர்களுக்கும் கூடக் கிட்டுகிறது என்பது ரசமான செய்தி. அவனைப் பற்றி ஒன்றுமே தெரியாத வெளிநாட்டவருக்கும் அவன் அருள் புரிந்திருக்கிறான். மதுரையில் அம்பாள் வடிவமாக, மதுராந்தகத்தில் ராம லக்ஷ்மண வடிவமாக அவன் வெள்ளைக்கார அதிகாரிகளுக்கு காட்சி தந்திருக்கிறான் என்பதை சமீப கால வரலாற்றில் பார்க்கிறோம்.*

*இறைவனைக் கண்ட பலர் பலவித தோத்திரங்களால் அவன் புகழ் பாடினர். ஆனால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்களைக் கொண்ட ஒரு நூல் இதற்கு ஒரு புதிய அழகை உருவாக்கி தந்திருக்கிறது. அதுவே குருவாயூரில் உள்ள கண்ணனை நோக்கியவாறே நாராயண பட்டத்ரி என்னும் பக்தர் இயற்றிய நாராயணியம் என்னும் க்ரந்தம். இவருடைய வரலாறு சுவையானது. இவர் கி.பி 1560 ஆம் ஆண்டு கேரளத்தில் பாரதப் புழை என்னும் நதிக்கரையில் மாத்ருதத்தர் என்று மீமாம்ச சாஸ்திர விற்பன்னருக்கு மகனாகப் பிறந்தார். சமஸ்கிருத மொழியில் மிகச் சிறந்த தேர்ச்சி பெற்ற இவர் வியாகரண சாஸ்திரத்தை அச்சுத பிஷாரடி என்பவரிடம் கற்று வந்தார். இவரது குரு, வாத நோயினால் பீடிக்கப்பட்ட போது அதைத் தாங்க முடியாமல் அந்த நோயை இவர் தானே ஏற்றுக் கொள்கிறார். பிறகு 26 வயதான நாராயண பட்டத்திரி தன்னுடைய நோய் நீங்க குருவாயூர் ஆலயத்திற்கு*

*சென்று ஸ்ரீமத் பாகவதத்தின் சாரமாக ஆயிரம் ஸ்லோகங்களுக்கு சற்று கூடுதலான எண்ணிக்கை கொண்ட நாராயணியம் என்னும் நூலை படைக்கிறார்.*

*இது பக்திஞான யோகங்கள் கலந்த ஒரு அற்புத நூல். இதில் ஒவ்வொரு ஸ்லோகத்தின் முடிவிலும் 'குருவாயூரப்பனே, இதேபோல சுகர் பரிக்ஷித்து மகாராஜாவிற்கு சொன்னாராம், இது உண்மையா?' என்று வினவ அதை மகிழ்ச்சியுடன் கேட்டுக்கொண்டிருந்த குருவாயூரப்பன் 'ஆமாம்.' என்று தலையசைத்து அங்கிகரித்தான் என்பது ஐதீகம். கண்ணனின் கதை அழகாக வர்ணிக்கப்படும் இதில் ஆங்காங்கே தத்துவக் கருத்துக்களும் சுடர் விடுவதை ரசிக்கலாம்.*

*ஒரு அற்புத கருத்தைச் சொல்கிறார். 'பிறப்பு இறப்பு என்னும் துயர் மிகுந்த இரட்டையை நீ படைத்து விட்டாயே என்று முன்பெல்லாம் நான் எண்ணி துன்பப்படுவேன். ஆனால் உன்னுடைய எழில் சொட்டும் கோமள உருவத்தைக் கண்டவுடன், இந்த படைத்தல் தொழில் இருப்பதால் அல்லவா இந்த அழகைக் கண்களால் பார்த்தும் காதுகளால் கேட்டும் ரசிக்க முடிகிறது என்ற அறிவு பெற்றேன்.*

*கஷ்டா தே ஸ்ருஷ்டி சேஷ்டா பஹுதர பவகேதாவஹா ஜீவ பாஜா*

*மித்யேவம் பூர்வம் ஆலோசிதம் அஜித!*

*....*

*நேத்ரை: ஸ்ரோத்ரைஸ்ச பீத்வா பரமரஸ ஸுதாம்போதிபூரே ரமேரன்|| 1.7*

*உடலை வாட்டும் வாதநோய் மிகவும் துன்புறுத்திய போதிலும் கண்ணனின் அற்புதமான வரலாற்றை ரசித்துப் பாடுகிறார். அவ்வப்பொழுது நோய் நீங்க வேண்டும் என்னும் தன்னுடைய பிரார்த்தனையை*



*ஸ்லோகங்களின் ஈற்று அடியில் வைக்கிறார். இது இந்த நூலுக்கு ஒரு தனி சிறப்பு.*

*இறுதியில் நூலின் கடைசி அத்தியாயத்தில் தான் நேரில் குருவாயூரப்பனை கண்ட காட்சியை வர்ணிக்கின்றார்.*

*'இதோ என் கண்ணெதிரில் ஒரு ஒப்பற்ற ஒளியைக் காண்கிறேன். அது மனதை கவருகிறது. அதன் நடுவில் பரவசத்துடன் நிற்கும் நாரதர் போன்ற பல முனிபுங்கவர்களாலும் அழகிய உபநிஷதங்கள் என்னும் பெண்கள் கூட்டத்தாலும் சூழப்பட்டுள்ள, குழந்தைப் பருவம் கடந்து இளமை ஆரம்பிக்கும் நிலையில் உள்ள தங்கள் திருவுருவத்தை பார்க்கிறேன்.'*

*(அக்ரே பஸ்யாமி தேஜோ நிபிடதரகலாயாவலீ*
*லோபநீயம் 100.1)*

*இவ்வாறு ஆரம்பித்து கண்ணனின் உருவ வருணனை கேசாதிபாதம் என்ற முறையில் அற்புதமாக வெளிப்படுகிறது. நேரில் கண்டு வருணித்த அந்த அநுபவம் புனிதமயமாக இருப்பதில் வியப்பேதுமில்லை.*

*இந்த நூலில் இரண்டு சிறப்புகள். கண்ணனை நேரில் கண்டு ரசித்த ஒரு பக்தனின் அற்புதமாக மகிழ்ச்சி பரவசம். மற்றொன்று சம்ஸ்கிருதத்தின் கொள்ளை அழகு. எதுகை, மோனை, அடுக்குச் சொல் என்ற எல்லா ரசனைகளையும் அணைத்துக்கொண்டு அதேசமயம் எளிய நடையில் செல்லும் இலக்கியப் பிரவாகம். இது ஒரு பக்தி காவியம் என்றாலும் பல இடங்களில் வேதாந்தக் கருத்துகளும் அற்புதமாக வெளிப்படுகின்றன. இறைவனின் அர்ச்சா ரூபம்*

*ஞான உருவமாகவும் அவருக்குத் தோற்றமளிக்கிறது. ரஜஸ் தமஸ் போன்ற குணங்களின் சேர்க்கை இல்லாத மறைத்தல், மாறுதல் அற்ற உன்னத சுத்த சத்வ வடிவம் காட்சி அளிக்கிறது. இவ்வாறு பக்தி வேதாந்த அனுபவமாக இந்தக் காவியம் நமக்கு இறைவனை காணும் உன்னத வாய்ப்பினை அளிக்கிறது.*

*இறைவனை ஒளி வடிவமாகக் காணும் மற்றோர் வாய்ப்பு வேதத்தின் மூலமாகக் கிட்டுகிறது. யஜுர் வேதத்தின் 16 வது அத்தியாயத்தில் உள்ள ஸ்ரீருத்ரம் என்ற பகுதி புகழ்பெற்றதாகும். அதில் நீலகண்டனாகிய இறைவன் சிவந்த வண்ணம் உடைய காலைச் சூரியனாக கிளம்புகிறான். இதுவே அருணோதயம் என்று இன்றும் நம்மால் வழங்கப்படுகிறது. இந்த சூரியனே இறைவனாகிய ருத்ரனின் அம்சம். 'இவனை அந்தக் காலை வேளையிலே இடையர்களும் தண்ணீர் பிடிக்க வரும் சாதாரணப் பெண்களும் பார்க்கின்றனர். அவன் நம்மை மகிழ்ச்சியாக வைக்கட்டும்' என்று வேதம் கூறுகிறது.*

*உதைனம் கோபா அத்ருஸன் அத்ருஸன் உதஹார்ய: ஸ: த்ருஷ்ட: ம்ருடயாதி ந: | யஜுர் 16.7*

*நம் அனைவருக்கும் தினசரி கிட்டக்கூடிய ஒரு நிகழ்வு இது. இறைவனை நேரில் கண்ட மாந்தர் உலகியல் துன்பங்களை புறக்கணிப்பது மட்டுமல்லாமல் அவற்றை மனதிலிருந்து அடியோடு நீக்கும் சக்தி படைத்தவர்கள். இதுவே பற்றற்ற வாழ்வின் அடித்தளம். இந்த அநுபவத்தை நாமும் நம் வாழ்வில் சில அற்புத தருணங்களில் பெறுகிறோம் என்பது நமக்குத் தைரியம் அளிக்கக் கூடியது.*

# முருகனார் நோக்கில் முழுமுதற் கடவுள்

**உரைஞர்: ரமணசுந்தர்ராஜன்**


## அருள் அரண்

*எவ் அருள் என் ஆருயிருக்கு ஏமநிலை கூட்டியதோ*
*அவ் அருளேயாம் என் அரண். – ஸ்ரீ ரஞாபோ. 1. 2130.*

*முருகனாரின் பாடல்கள் ஞானப் புதையல். ரமண பக்தர்களுக்கு நல்ல வழித்துணை. ரமண வலிமையை முழுமையாக வெளிப்படுத்தும் ஆற்றல் மிக்கவை. பகவானை நம்பி வந்த முருகனார், பகவானின் அருளையே தன் உயிருக்குப் பாதுகாப்பு என்று உணர்ந்தவர். தன் உயிர், ரமணனின் பாதுகாப்பில் நலமாக இருப்பதால் உயிரைப் பற்றிய பயமே இல்லாமல் தன் வேலையைப் பார்க்கிறார். ரமண அருள் என்னைக் காக்கும் கோட்டை என்கிறார் முருகனார்.*

*முருகனாருக்கு மட்டுமல்ல, ரமண பக்தர்கள் அனைவருக்குமே ரமண அருள் வலிமையான பாதுகாப்பு. ரமணா சரணம் என்று ரமணனை மட்டுமே நம்பி வாழுங்கள். உங்கள் ஆருயிரை பகவான் உங்களை விட நன்றாகக் கவனித்துக் கொள்வார்.*

*நீங்கள் நம்புவீர்கள் என்று நம்புகிறேன். ஏதாவது புதிய மாத்திரை எடுத்துக் கொள்ளும் முன்பு, பகவானே இதைப் போடட்டுமா என்பேன். போடு என்றால் தான் போடுவேன். இல்லையென்றால் போட மாட்டேன். மாத்திரைகள் மட்டுமே குணமளிக்காது. ரமண அருள் மாத்திரமே குணமளிக்கும்.*



*ரமணன் மருத்துவன், ரமணன் ஆசான், ரமணன் நம் உண்மைத் தாய், தகப்பன், ரமணன் நல்ல நண்பன், ரமணன் உயிர்க் காவலன். ஸர்வம் ரமண மயம்.*

*ரமண பக்தர்கள் அடிக்கடி இப்படிப் பாடிக் கொள்ளலாம்.*

*"ரமணன் என்றெண்ண யான் அருட்கண்ணி பட்டேன் உன் அருள் வலை தப்பாது ரமணாசலா"*

## எல்லாம் மனக்கற்பனை

***காண் அவத்தை யாவும் மனக்கற்பனையாக் காண்பர் கார்***
***ஆணவத்தை மாய்த்த அவர். – ஸ்ரீ ரஞாபோ. 1. 1932.***

*பகவான் முழுமையான தெய்வமாக இருப்பதோடு, முழுமையான மனநல மருத்துவராகவும் இருப்பவர். இந்த மனநல மருத்துவர், நமக்குக் கொடுக்கும் முதல் ஆலோசனை, மனத்தைத் தூக்கிப் போடு என்பதாகும். எப்போதும் மனத்தை எதற்கும் கொண்டு வராதே. ஒரு சம்பவத்தைக் காண்கிறாய். உள் வாங்கிக் கொள்கிறாய். உன்னோடு தொடர்புபடுத்திக் கொண்டு அலசுகிறாய். ஆனந்தம், ஆத்திரம், அமைதி முதலிய பல உணர்ச்சிகள் ஏற்படுகிறது. உன்னோடு தொடர்புபடுத்திக் கொள்ளவில்லை என்றால் அந்தச் சம்பவத்தையே மறந்து விடுகிறாய். எனவே உன்னோடு தொடர்புபடுத்திக் கொண்டால் தான் துக்கம். எதையும் உன்னோடு தொடர்பு படுத்திக் கொள்ளாதே. தொடர்புபடுத்திக் கொள்வதுதான் மயக்கம் தரும் ஆணவம். எல்லாச் சம்பவமும் மனத்தால் ஏற்பட்டதுதான். நான் தனித்தவன், எனக்கு மனமில்லை, அதனால் மனக் கற்பனையை மதிப்பதில்லை. எனது என்று எதுவும் இல்லாததால், மனம் ஒரு கற்பனை என்பதால், எனக்கு ஏற்படுவதாக உலகோரால் சொல்லப்படும் எந்தத் துன்பத்தாலும் அசருவதே இல்லை. எல்லாமே ஆணவ மனக் கற்பனையாகவே அறிந்து, நிகழ்வுகளோடு, மனிதர்களோடு, இன்ப*

*துன்பங்களை, நல்லவர், கெட்டவர்களை ரசித்து அமைதியாய் ஆனந்திக்கிறேன்.*

*கருத அரிய உண்மைக் கடவுளை முற்றக்*
*கருதுவது மோனக் கருத்து. – ஸ்ரீ ரஞாபோ. 1. 1477.*

*முருகனார், மோனத்தைப் பற்றி, குறைந்தது ஆயிரம் பாடல்களேனும் பாடியிருப்பார். எல்லாமே முத்தான மோனக் கருத்துகள்தாம். முடிவான அனுபவங்கள். படிக்கும்போதே பிரமிக்கிறேன். பழக வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது. முடியவில்லை. இன்றைக்கு இந்தப் பாடல் என் நெஞ்சைத் தொட்டது.*

*கடவுள் என்பது குறித்து, எத்தனை கணக்குப் போட்டாலும் சரியான விடை கிடைப்பதில்லை. எல்லாம் தப்புக் கணக்காகத்தான் போய்விடுகிறது. 'சத்' என்று நாம் சொல்லும் உண்மைக் கடவுளை முடிந்த முடிவாக உணர்ந்தே ஆக வேண்டும் என்று முயல்வது தான் மோனத்தின் லட்சியம். அந்த முயற்சியில் வெல்ல, எளிதான வழி ரமண வழியாகும். பகவானின் உபதேசங்களைப் படித்துப் பயின்றால் கடவுளை முழுவதும் அறிந்ததாகும். இன்னும் சொல்லப் போனால் நம் பகவானே முடிந்த முடிவாகும்.*

*கடவுளை முழுமையாக அறிய, கீழ்க்கண்ட வழிகளில் தொடர்ந்து முயற்சிக்கலாம்.*

*1. நான் யார் என்னும் ஆத்ம விசாரம் செய்யலாம்.*

*2. நம் பகவானைச் சரணடையலாம்.*

*3.சிந்தனையே இல்லாமல் சும்மா அமர்ந்திருக்கலாம்.*

*4. Talks with Sri Ramana Maharshi (பகவத் வசனாம்ருதம்) நூலைத் தொடர்ந்து திரும்பத் திரும்பப் படித்துச் சிந்திப்பதால், கடவுளை முழுமையாகத் தெரிந்து கொண்டு விடலாம்.*

## மோனமே சுத்த அருள்

*மெய்த்தவமா என்னுள் விளங்குவது சுத்த அருள்*
*வித்தகமாம் உண்மை விறல் சான்ற மோனமே*
*பொய்த்து ஒழிவால்*
*ஊனமனப் பொல்லாங்காம் மோகம் அறத்*
*தத்துவமாம் உண்மை நிலை தான் தானாய்த் தங்கியதே*
*– ஶ்ரீ ரஞாபோ. 1. 1695.*

*முருகனார் தன்னிலை விளக்கம் அளிக்கும் முக்கியமான பாடல். வார்த்தைக்கு வார்த்தை ஞானம் பளிச்சிட, கோக்கப்பட்ட பாடல்.*

*முருகனார் மெய்யான தவம் செய்கிறார். தவமே அவருள் விளங்கிக் கொண்டிருக்கிறது. இந்தத் தவம் ரமண சுத்த அருளால் நடைபெறுகிறது. இது ஞானத் தவம். உண்மையான வெற்றியைத் தரும் தவம். அதுதான் மோனம். மோனமே உண்மையான தவமாய் ரமணப் பரிசுத்த அருளால் தன்னில் விளங்குவதாக முருகனார் சொல்கிறார்.*

*மோனமே சொரூபமாகும். இந்த மோனத்தினால் என்ன நடந்தது? தீமை அளிக்கும் மனத்தின் பொய்ம்மை போனது. பிறரை மதியாது, புறம் பேசும் மோகம் அழிந்தது. தானே தானாய் முருகனார் தழைக்கிறார். தான் தானாவது தானே தத்துவம்; தான் தானாவது தானே உண்மைநிலை.*

*ஒரு வார்த்தைகூட, பயனில்லாத வார்த்தையில்லை. சொற்செட்டு என்பார்கள். அதனை இங்கே பார்க்கிறேன்.*

*(சொல்லைச் சிக்கனமாகச் செலவழிக்கிறார்) வார்த்தைக்கு வார்த்தை வீரியம் பெருகுகிறது. உண்மையான வீரம் உள்ளுள் இருந்து வித்தகத்தை (ஞானத்தை) வெளிப்படுத்துகிறது. எங்கள் முருகன் (முருகனாரை அன்புடன் அழைக்கிறேன்) எங்கள்*

*ஆசான். ரமண மோனத்தை உலகறியச் செய்த ஒளிபெருக்கி, ஒலிபெருக்கி.*

*எனக்கு இவ்வாறு எழுத அறிவு கொடுத்த ஆசானுக்கும் அண்ணலுக்கும் ஆயிரம் வணக்கங்கள்.*

## அருட் பார்வை

*அருட்பார்வை அன்றி அயல் பார்வை எல்லாம்*
*மருட்பார்வையாகும் மனத்து. – ஸ்ரீ ரஞாபோ. 1. 1698.*

*திருக்குறளைப்போல் ஒன்றரை அடிகளில் இமாலய ஆன்மீகக் கருத்துகளை எளிமையாக இயம்புகிறார் ஆன்மீக வித்தகர் முருகனார். ★கண்கவர் நாயகன் கவர்ச்சித் திலகம் ★எங்கள் ரமண தேவனைக் ★கண்ணாரக் காணுங்கள். ★ரமணனின் கண்கள் அருட் கண்கள் மட்டுமல்ல; ஆட்கொல்லி. ஆம், ஜீவத்துவத்தை நசித்துக் கொல்லும் கண்கள். திருப்பாணாழ்வார் சொல்லி அடித்ததுபோல் ('அரங்கனைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்றவாறு அரங்கனோடு ஒன்றானது போல்) ரமணனைக் கண்ட கண்களால் மற்ற எந்தக் காட்சியையும் காணக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தவர் முருகனார். ஏனெனில் பிற காட்சிகள் எல்லாம் அந்நியக் காட்சிகள். பகவானிடமிருந்து அந்நியப் படுத்தும் காட்சிகள். அதனால் பிற காட்சிகள் எல்லாமே அந்நியக் காட்சிகளாக எண்ணவேண்டும் என்கிறார் முருகனார். இந்தக் காட்சிகள் எல்லாம் ஊன மனத்தின் காட்சிகள். ஒரு காட்சியைப் பார்த்தவுடன் மனம் மளமள என்று அந்தக் காட்சியோடு ஒன்றி நம்மை மயக்கி, சீரழித்து உலகப் பொய்ம்மையோடு உறவாடத் துடிக்க வைக்கிறது. அதனால் அவை நம்மை அழிக்க வல்லவை என்று உணர்ந்து அஞ்சி அதனின்று விலக வேண்டும்.*

*ரமணனை மனமற்றுப் பார்த்துக்கொண்டே இருந்தால் நமக்கு அருட்பார்வை கிட்டிவிட்டது என்று பொருள். மற்ற காட்சிகளைப் பார்ப்பது மனத்தை வளர்த்து மனப் பிசாசால் நம்மை அச்சுறுத்துவது.*

*பார்வை ரமணனிலேயே நிலைக்கட்டும்.*

## எதிலும் ஆத்மா

*உரைஞர்: T.R.கனகம்மாள். 'நினைவில் நிறைந்தவை' நூலில் இருந்து.*

*ஒருநாள் சாது ஒருவர் வந்து ஹாலில் உட்கார்ந்திருந்தார். முகத்தைப் பார்த்தால் ஏதோ அத்யாத்மிக சாதனையில் ஈடுபட்டவர்போல் தோன்றியது. அவர் பகவான் அருகில் சென்று, "சுவாமி, ஆத்மா எங்கும் நிறைந்திருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது இறந்து போன சரீரத்தில் கூட இருக்கக் கூடுமா" என்று மெதுவாகக் கேட்டார்.*

*அதைச் செவியுற்ற பகவான், "உமது தூக்கத்தில் நான் இருக்கிறேனா இல்லையா என்ற சந்தேகம் உமக்கு வருகிறதா? தூங்கி எழுந்த பிறகு தானே 'நான் இருக்கிறேன்' என்று சொல்லுகிறீர். அதே மாதிரி இறந்து போன சரீரத்திலும் ஆத்மா இருக்கத்தான் இருக்கும். யதார்த்தத்தை விசாரித்து அறிந்தால் செத்துப் போன சரீரமும் இல்லை, பிழைத்த சரீரமும் இல்லை."*

*"அசைகின்றதைப் பிழைத்தது என்கிறோம். அசையாது ஜடம்போல் இருப்பதைச் செத்துவிட்டது என்கிறோம். அவ்வளவுதான். கனவில் செத்த உடல்கள், சாகாத உடல்கள் இன்னும் என்ன எல்லாமோ பார்க்கிறோம். தூக்கத்திலிருந்து விழித்ததும் அவை இல்லாதவையே. அதைப்போல இந்த அகில பிரபஞ்சமும் இல்லவே இல்லை. 'நான்' என்னும் விருத்தி (எழுச்சி) இல்லாமல் போவதே சாவு. பிறப்பு என்பது 'நான்' என்னும் விருத்தியின் பிறப்பே. இவை தான் ஜனன மரணங்கள்.*

*"இந்த ஜனன மரணங்கள் அகங்காரத்திற்கே அன்றி உமக்கு ஒன்றும் இல்லை. அந்த 'அகம் விருத்தி' இருந்தபோதும் நீர் இருக்கிறீர். இல்லாதபோதும் நீர்*

இருக்கிறீர். அந்த விருத்திக்கு நீர் மூலமே அன்றி விருத்தி நீர் இல்லை. மேலே சொன்ன ஜனன மரணங்களின் மூலத்தை நன்கு அறிந்து அகங்காரத்தை வேருடன் அழிப்பதே முக்தி. அதாவது, அறிவுடன் சாக வேண்டும். அப்படிச் செத்தவன் 'அகம் அகம்' என்னும் ஆத்ம ஸ்புரணமாக அங்கே பிறக்கிறான். அந்தப் பிறப்பைக் கண்டவனுக்கு எந்தச் சந்தேகமும் இருக்காது. செத்தது, பிழைத்தது என்ற பேதமும் இருக்காது. எல்லாச் சந்தேகமும் அகங்காரத்திற்குத் தான்" என்று பகவான் விடை அளித்தார். இந்த உபதேசத்தைக் கேட்ட சாதுவின் முகம் பொலிவு பெற்றது.

இந்த அரிய உபதேசத்தை எந்த நூல்களிலிருந்து நாம் பெற முடியும்? அனுபவ ஸ்வரூபமாக உள்ள பகவானால்தான் இப்படித் தெளிவாக விளக்க முடியும்.

கூர்ந்த சமநோக்கக் குறிப்பால் விளங்கும், அகம்
தேர்ந்த சான்றோர் மெய்த்திறம். – ஸ்ரீரஞாபோ.1.1708

சாது ஓம் சுவாமிகள் அற்புதமாகச் சொல்வார்: ரமணன் ஆட்சியில் அதர்மமே இல்லை.

பகவான் இதைச் செய்யவில்லை, அதைச் செய்யவில்லை, அவருக்கு மட்டும், இவருக்கு மட்டும் போன்ற சிணுங்கல் முனங்கல் எல்லாம் ரமண பக்தர்களுக்குக் கூடாது. பகவானின் சமநோக்கு, தர்ம பரிபாலனத்தை, அவரது வாழ்வில் நடந்த பல சம்பவங்களில் இருந்து நம்மால் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும். அணு அளவும் பிசகாத சமதர்ம நோக்கு; சமதர்மப் பேச்சு; சமதர்ம நடத்தை.

ரமணாவதாரம் முழுமையான சமநோக்கைக் கொண்ட அவதாரம். தாழ்த்தப்பட்டவர்களையும், தாழ்ந்த உயிரினங்களையும், மிக உயர்ந்த சான்றோர்களையும் ஒரே மாதிரி பார்க்க, சம நோக்கன் ரமணனால் மட்டுமே முடிந்தது.

*ரமணனை நீ அகத்தில் கொண்டவனா? ரமணனே உனக்கு எல்லாமா? அதற்கு ஒரு சிறு குறிப்பை முருகனார் குறிப்பிடுகிறார். ரமணனை, சத் வஸ்துவை அகத்தில் தெளிவாகக் கொண்டவனின் நடத்தையைப் பார்.*

*அவனது பார்வை அறிவுப் பார்வையாக இருக்கும். உண்மையான ரமண பக்தனை நீ ஆராய்ந்து பார்த்தால் அவன் இயல்பாகவே சமமான பார்வை கொண்டவனாக இருப்பதை நீ விளங்கிக் கொள்ள முடியும்.*

*எனவே பகவானைப்போல் சமநோக்கோடு வாழ்வதே ரமண வாழ்வு என்று புரிந்துகொண்டு வாழ்பவன் ரமணனின் பேரன்புக்குப் பாத்திரமாவான்.*

***உலகு இயங்கலால் ஊறு இல்லை, தன்னில்***
***உலகம் இயங்காவிடில்.***

*– ஸ்ரீரஞாபோ.1.716.*

*'ரமணர் காட்டும் உலகம் தனி உலகம். அந்த உலகத்தில் மொத்தம் இருவர்தான் உண்டு. ஒன்று நான். மற்றொன்று ரமணர். கூட யாரையும் சேர்த்துக் கொள்ள மாட்டேன். நான் மட்டும் ரமணரோடு. உலகம் என்று ஒன்று இருக்கிறதா? இருக்கட்டுமே. எனக்கு உலகமும் இல்லை, ஒன்றுமில்லை. எல்லாம் ரமணர் தான். என்னில் இயங்குபவர் ரமணர். என் இயக்கமே ரமண இயக்கமாகும். என்னில் எந்த உலகச் சிந்தனையும் இல்லை. ஏன் உலகமே இல்லை. வெளியில் உலகம் இயங்குகிறதா இயங்கவில்லையா என்ற கவலை எனக்கு இல்லை. உலகம் இருப்பதனால் எனக்கு ஒரு துன்பமும் இல்லை. நான் இருக்கிறேன். என்னில் ரமணர் நானாய் இருக்கிறார். எனக்கென்று ரமணர் உருவாக்கிய உலகத்தில் நான் ரமணரோடு, ரமணர் இயக்கும் வகையில் உலகையே மறந்து உவகையோடு உலாவுவேன்.'*

*முருகனாரின் அனுபவம் இப்படித்தான் இருந்திருக்கும்.*

## ரமண அறிவு

*எவ் அறிவால் எல்லா அறிவும் இகப்பவோ*
*அவ் அறிவே உண்மை அறிவு.*

*– ஸ்ரீரஞாபோ.1.1363.*

*ரமண பக்தர்களாக ஆனபிறகு, மேலும்மேலும் உலக அறிவை வளர்த்துக் கொள்ளக் கூடாது. இதுவரை நீங்கள் பெற்ற உலக அறிவு உங்களுக்குப் போதும். இனி ரமண அறிவை மட்டும் நீங்கள் வளர்த்துக் கொண்டால் போதுமானது. ரமண அறிவு எல்லையற்றது. ரமணரின் நூல்கள் மற்றும் ரமணரைப் பற்றிய நூல்களை மட்டுமே ஆழ்ந்து படியுங்கள். உங்கள் ரமண பக்தியால், எஞ்சிய வாழ்வை ரமண சிந்தனைகளே வழி நடத்தும். இனி உங்களுக்கு ரமண அறிவே உண்மை அறிவு.*

*ரமண அறிவு பிரபஞ்ச அறிவு. எது தேவையோ அதனை உங்களுக்கு அளிக்கத் தேவையான அறிவை அளிக்க வல்லது. அந்த அறிவு, சித் சக்தியாம் இறைப் பேரறிவை, பேராற்றலை இயல்பாக உங்களுக்குக் கூட்டும் அறிவு. ரமண அறிவால், உலகைக் கற்பனையாகவும், உலகில் நடப்பவற்றைக் கற்பனையாகவும் காணக்கூடிய தன்மை நமக்கு ஏற்படும். எதுவும் நமக்கு இனிப் பெரிது இல்லை. ரமண சித் சக்தி, ரமணசதானந்தம் (சத்+ஆனந்தம் என்றும் சொல்லலாம்) நம்மில் நிலைத்திட உலக அறிவைக் கற்பனையாய் ஒதுக்கி உங்களில் நீங்கள் அமைதியாய் ஆனந்தமாய் வாழுங்கள்.*

*(இதுவே முருகனாரின் அனுபவம்)*

*அறிவில் விளங்கும் அமைதித் தெளிவே*
*குறைவு இல் பேரின்பக் குலா.*

*– ஸ்ரீரஞாபோ.1.1791.*

*உலக அறிவைக் கற்பனையாய் விலக்கிய பிறகு, ரமண அறிவாம் உண்மை அறிவுக்கு நாம் வந்து விட்டோம். பகவானின் ஒவ்வொரு உபதேசமும், இந்த உலகத்தில் இருக்கிறோம், ஆனால் இல்லை என்பதுபோல் வாழ்வதற்கு ஆனவை. தொட்டும் தொடாமல், பட்டும் படாமல் வாழத் தொடங்குகிறோம். ரமண அறிவோடு உலகை அணுகும்போது, உண்மையில் நாம் எல்லாவற்றையும் நுணுக்கமாக ஆராய்கிறோம். முன்பு மிகவும் முக்கியமாக நினைத்தவை அனைத்தையும் மிக எளிமையாக விலக்கி விடுகிறோம். உலகமும், உலக அறிவும், உலகோடு தோய்ந்தவர்களின் உறவும் மிகவும் அற்பமாகி விடுகிறது. திருவள்ளுவ ரிஷி கூறுவது போல், ஒவ்வொன்றாக விலக்க விலக்க அதனால் துன்பத்திலிருந்து விலகி விடுகிறோம். (யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்).*

*அறிவு தெளிவடைவதால் அமைதி தெளிவாக அமைகிறது. மனம் எழுந்திராது அமைதியானால் ஆனந்தம் இயல்பாகி விடும். இயல்பான ஆனந்தம், குறைவே இல்லாத பேரின்பக் கொண்டாட்டம் தானே என்கிறார் முருகனார்.*

**ரமணோதய அன்பர்களுக்கு**
**ஓர் அன்பான வேண்டுகோள்**

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவை புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.




# ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

## அன்னை அழகம்மை – மகாபூஜை

*பகவான் ரமணரின் நேரடிப் பார்வையில் சிறிது சிறிதாக பக்குவப்படுத்தப்பட்டு அவரது மடியில் முக்தியடையும் பேறுபெற்ற அன்னை அழகம்மையின் சமாதி தினம் (மகாபூஜை) 3/6/2021 வியாழக்கிழமையன்று ஆச்ரமத்தில் எளிமையான முறையில் நடைபெற்றது.*

*பிற்காலத்தில் ஸ்ரீ ரமணாஸ்ரமம் என்று உருவானது அன்னை அழகம்மை சமாதி வைக்கப்பட்ட இடம்தான் என்பது குறிப்பிடத்தக்கது.*

## பசு லட்சுமி ஆராதனை

*உடலால் மிருகமாக இருந்தாலும் பகவானின்மீது கொண்ட அசாதாரண பக்திப் பிரேமையினால் ஆன்மிக முன்னேற்றம் அடைந்து அவரது மடியிலேயே முக்திபெறும் பேறு பெற்ற பசு லட்சுமியின் ஆராதனை 22/06/2021 செவ்வாய்க்கிழமை ஆச்ரமத்தில் அமைந்துள்ள பசு லட்சுமி சமாதியில் எளிமையான முறையில் நடைபெற்றது.*

# ரமண கேந்திர செய்திகள்

## ரமண கேந்திரம், மைலாப்பூர்.

*கொரானா தொற்றுநோயின் இரண்டாவது அலை பரவல் பேரழிவு ஏற்படுத்திக்கொண்டுள்ள இக்காலகட்டத்தில், மேலும் இந்தப் பேரிடர் பரவாது தடுக்கவேண்டி அரசாங்கம் எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் உறுதுணையாக இருக்கும் வண்ணம், ரமண கேந்திரம் அனைத்து சத்சங்க கூட்டங்களைத் தவிர்த்து, மிக எளிய முறையில் சமூக இடைவெளி கடைப்பிடித்து தினசரி பூஜைகளையும் விசேஷ நாட்களையும் அனுசரித்து வருகிறது. பக்தர்கள் கூடுவதைத் தவிர்த்து கவனத்துடன் செயல்படுகிறது.*

## மாத்ருபூதேஸ்வரர் மகா பூஜை

*அன்னை அழகம்மையின் சமாதி தினம் (மகாபூஜை) 3/6/2021 அன்று எளிமையான முறையில் சென்னை ரமண கேந்திரத்தில் கொண்டாடப்பட்டது.*

## பசு லட்சுமியின் ஆராதனை

*பசு லட்சுமியின் ஆராதனை 22-06-2021 செவ்வாய்கிழமை எளிமையான முறையில் சென்னை ரமண கேந்திரத்தில் நடைபெற்றது.*



*பசு லட்சுமி ஆராதனை, ஸ்ரீரமணாஸ்ரமம்*

## குரோம்பேட்டை, ரமணாலயம்

*மகாபூஜை (3/6/2021), பசு லட்சுமி ஆராதனை (22/6/2021) ஆகிய நிகழ்வுகள் குரோம்பேட்டை ரமணாலயத்தில் எளிமையான முறையில் நடைபெற்றது.*

*திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் உதவியுடன் இப்பேரிடர் நாட்களிலும் எளியவர் துயர் துடைக்கும் நோக்குடன் நாள்தோறும் 100 பேருக்கு நாராயண சேவை மதியம் நடைபெறுகிறது.*

## ரமண சச்சிதானந்த சபை, கிருஷ்ணாபுரம் சூளைமேடு சென்னை.

### மாத்ருபூதேஸ்வரர் மஹாபூஜை 3/6/2021

*அன்னை அழகம்மை ஆராதனை 3/6/2021 வியாழக்கிழமையன்று திருவாசக செந்நாவலர் சத்குருநாத ஓதுவார் தலைமையில் திருவாசக முற்றோதல் சிறப்பாக நடைபெற்றது.*



*மகாபூஜை, ஸ்ரீ ரமணாலயம், குரோம்பேட்டை*

# பேரா. எ. கொண்டல்ராஜ்

*நொந்திடா வாழ்வு எய்தி நொடியதிற் பவநோய் போக்க..*

*- ஸ்ரீ ரமண ஸ்துதி பஞ்சகம், பொன்னொளிர் பத்து (4).*

*"நோய், நொடி இல்லாமல் எந்தவித துன்பம் இல்லாத வாழ்வையளித்து ஒரு நொடியில் உடலை உகுத்திட"*

*நைந்து அழிகனியால் நலனிலை, பதத்தில்*
*நாடி உட்கொள் நலம் அருணாசலா*

*- அக்ஷரமணமாலை 61*

*"நைந்து அழியக் கூடிய கனியால் பலன் ஒன்றும் இல்லை. சரியான பதத்தில் என்னை ஆட்கொள் அருணாசலா!"*



*மேலே கூறியதற்கு இணங்க உயர்ந்த ரமண பக்தர், மதுரை ரமண கேந்திரத்தின் செயலாளர், ரமண ஒளி காலாண்டு இதழின் பதிப்பாளர் முனைவர். எ. கொண்டல்ராஜ் அவர்கள் கடந்த 5-6-2021 காலை 9.30 அளவில் பகவானின் திருவடியில் கலந்தார்* (Massive Heart Attack).

*கொண்டல்ராஜ் அவர்கள் 1959 ஆம் வருடம் செப்டம்பர் 27 ஆம் தேதி புண்ணிய புனர்வசு நக்ஷத்திரத்தில் திரு. எதிராஜ் - சுலோசனா தம்பதிகளுக்கு முதல் மகனாகப் பிறந்தார். அவருக்கு 5 சகோதரிகள் மற்றும் ஒரு சகோதரர் உள்ளனர்.*

*மகாகவி பாரதியார் பணியாற்றிய பெருமையுடைய மதுரை சேதுபதி பள்ளியில் கல்வி பயின்றார். அதன்பின் மதுரை தியாகராஜர் கல்லூரியில் இளங்கலை மற்றும் முதுநிலை தமிழ் பயின்றார். அதன்பின்னர் அவர் பயின்ற தியாகராஜர் கல்லூரியிலே (2000-2017) ஆம் ஆண்டுகளில் பேராசிரியராகப் பணியாற்றினார். தனது* M.Phil *படிப்பிற்கு பகவான் ரமணரின் வாழ்க்கை சரிதத்தை தேர்ந்தெடுத்தபொழுது 1972–ஆம் ஆண்டிலிருந்து மதுரை*

*ரமண மந்திரத்திற்கு வரத்தொடங்கினார். அதன்பின்னர் திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமம் தொடர்பு ஏற்பட்டது. அந்தத் தொடர்பு ஜூன் 5 ஆம் தேதி 2021 வரை தொடர்ந்து நீடித்தது. இந்த ஆராய்ச்சிப் படிப்பிற்காக திருவண்ணாமலை சென்றபொழுது அவரை திரு. சந்திரமௌலி அவர்கள் பகவான் பக்தர்களான ராமசாமிப் பிள்ளை, குஞ்சு சுவாமிகள், அண்ணாமலை சுவாமிகளிடம் அழைத்துச் சென்றார். அதன்பின்னர் முருகனாரின் ரமண சந்நிதிமுறையில் அருளமுதம் என்ற தலைப்பில் முனைவர் பட்டம் பெற்றார். மேலும் முதுகலை பட்டங்களே 5 வாங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்திற்கு பாத்தியப்பட்ட திருவேடகம் ஸ்ரீ விவேகானந்த கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக 3 (1986-1989) ஆண்டுகள் பணிசெய்தார். அப்போது அன்பர்களால் பெரியசுவாமி என்று அழைக்கப்படும் சுவாமி சித்பவானந்தர் மற்றும் தபோவனத்தைச் சேர்ந்த பிற சாதுக்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தார். இதனால் ஒவ்வொரு வருடம் பகவான் ரமண மகரிஷிகளின் ஆராதனை விழாவிற்கு திருப்பராய்த்துறை சாதுக்களையும் மற்றும் அம்பாக்களையும் சொற்பொழிவிற்காக அழைப்பதை வழக்கமாக வைத்திருந்தார்.*

*திரு.கொண்டல்ராஜ் அவர்கள் தன்னுடைய மனைவி நித்யா மற்றும் மகன் ரமணனுடன் திருவண்ணாமலையில் 1995–ஆம் ஆண்டு வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து தங்கி இருந்தார். மேலும் ரமணாச்சரமம் அடிக்கடி செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். ரமண நகர், ரமணாச்ரமம், உலகெங்கும் உள்ள ரமண பக்தர்களுடனும் மற்றும் பகவானின் அணுக்கத் தொண்டர்களான குஞ்சு சுவாமி, ராமசாமி பிள்ளை, ஸ்ரீ சாது ஓம் மற்றும் அண்ணாமலை சுவாமியுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றிருந்தார். ரமணாச்ரமத்தின் முன்னாள் தலைவர் திரு. வே.சு.ரமணன் - திருமதி. சுசீலாமன்னி, திரு.வே.சு.மணி – திருமதி. ரமணிமன்னி அனைவரும் இவரின் குடும்பத்தாரின் மீது மிகுந்த அன்பு வைத்திருந்தனர். ரமணேச லிங்கத்தின் வெள்ளி கவசம் மற்றும் பழைய*


*பூஜை பொருட்கள் அனைத்தும் இவரிடம் கொடுக்கப்பட்டு மதுரையில் புதுப்பிக்கப்பட்டு ரமணாச்ரமம் அனுப்புவதற்கு மிகுந்த உதவியாக இருந்தார்.*

*1972–ஆம் ஆண்டு மதுரை ரமண மந்திரம் வந்ததிலிருந்து தினசரி வந்து ஆத்ம விசாரம் செய்வதை வழக்கமாக வைத்திருந்தார். 1996 ஆம் ஆண்டு பகவான் மதுரையிலிருந்து திருவருணை அடைந்த நூற்றாண்டு விழாவின் ஆரம்பத்திலிருந்து 2019 ஆண்டு வரை சுமார் 24 ஆண்டுகள் அருண விஜய யாத்திரைக்கு திரு.கொண்டல்ராஜ் அவர்கள் ஆற்றிய பணிகள் அளவிடமுடியாதது. மேலும் பகவான் ஜயந்தி, ஆராதனை விழா மற்றும் ஜூலை மாதம் நடைபெறும் ஞானோதய விழா (ஜூலை 17) பெங்களூர் RMCL கலை நிகழ்ச்சிகளில் முக்கியப் பங்காற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. 1985–ஆம் ஆண்டு திருப்பராய்த்துறை சுவாமி சித்பவானந்தரால் துவங்கப்பட்ட ரமண கேந்திரத்தின் காலாண்டு வெளியீடான ரமண ஒளிக்கு சுமார் 35 ஆண்டுகளாக பதிப்பாளராக செயல்பட்டு அதை மிகச் சிறப்பான முறையில் வெளிக்கொணரக் காரணமாக இருந்தார். மேலும் இதழைப் பதிவு செய்வதற்கு டெல்லியைச் சேர்ந்த பகவான் பக்தர் திரு.பலராமன் அவர்களுடன் சேர்ந்து அயராது உழைத்தார். ஒவ்வொரு ஆண்டும் வருமானவரித்துறைக்கு ஆண்டறிக்கை சமர்பித்தல் மற்றும் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஊரடங்கு காலத்திலும் பகவான் ஜயந்தி மற்றும் ஆராதனை விழா நடத்துவதற்காக மதுரை ஆட்சியர் அலுவலகத்தில் அனுமதி வாங்குவதில் அவர் ஆற்றிய ரமணாய பணிகளை விவரிக்க வார்த்தைகள் இல்லை.*

*உயர்ந்த எளிமையான ஆன்மிக வாழ்க்கை வாழ்ந்த திரு.கொண்டல்ராஜ் பகவான் திருவடிகளில் சரணடைந்து அண்ணாமலையுடன் இரண்டறக் கலந்துவிட்டார். அவரது மறைவு அன்னாரின் குடும்பத்திற்கும், மதுரை ரமண கேந்திராவிற்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பு. அன்னார் குடும்பத்தார் மற்றும் ரமண பக்தர்கள் மனச்சாந்தி அடைய பகவானைப் பிரார்த்திப்போம்.*

# ரமணி

*ஸ்ரீ ரமணி (1932-2021) திருச்சியில் பிறந்தவர். சிறிது காலம் தமிழக அரசுக்கு செயலகத்தில் பணியாற்றி பின்னர் தெற்கு ரயில்வேயில் பணி புரிந்து 1990 களின் முற்பகுதியில் ஓய்வு பெற்றார்.*



*பணி ஓய்விற்குப் பிறகு அவர் திருவண்ணாமலையில் குடியேறிய ரமணி 1995 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசிரம கும்பாபிஷேகத்தின் போது தனது பங்களிப்பை வழங்கினார். பின்னர் ஆசிரமத்தின் சமஸ்கிருத வெளியீடுகளைச் சரிபார்த்து, பகவானின் ஆவணங்களை காப்பகப்படுத்தத் தொடங்கினார்.*

*பகவான் பல்வேறு மொழிகளில் எழுதிய ஆயிரக்கணக்கான கையெழுத்துப் பிரதிகளை வகைப்படுத்துதல், வரிசைப்படுத்துதல் மற்றும் டிஜிட்டல் ஆவணங்களாக மாற்றுதல் முதலிய பணிகளை 2000 ஆண்டுகளிலிருந்து மேற்பார்வையிட்டார்.*

*2016 ஆம் ஆண்டில், இடுப்பு எலும்பு முறிவு ஏற்பட்டு அறுவை சிகிச்சைகளுக்குப் பின்னரும் 2020 ஆண்டு மார்ச் மாதம் வரை ஆச்ரம ஆவணக் காப்பகத்திற்கு வந்து கொண்டிருந்தார்.*

*தனது இறுதி நாட்களில் கூட மீண்டும் தான் ஆசிரமத்திற்கு திரும்ப வேண்டும் என்று ஆவலை குடும்ப உறுப்பினர்களிடம் கூறிக் கொண்டிருந்தார். கடந்த ஜூன் 12, 2021 ஆம் தேதி, சென்னையில் தனது 89 ஆம் வயதில், திரு. ரமணி சிறுநீரக மற்றும் வலது வென்ட்ரிக்குலர் செயலிழப்பு காரணமாக பகவான் பதமடைந்தார்.*

*ஏறக்குறைய இரண்டு தசாப்தங்களாக அவர் ஆசிரம ஆவணக் காப்பகங்களை மேற்பார்வையிட்டு வந்தார். அமைதியான செயல்திறன், அர்ப்பணிப்பு மற்றும் விடாமுயற்சி*

*அவர் தனது பணியினை செய்து வந்த திரு. ரமணி அவர்களது சேவையை நினைவுகூரும் விதமாகவும், குடும்பத்தினரின் ஆறுதலுக்காகவும் ஆச்ரமத்தில் அன்பர்களால் அக்ஷரமணமலை பாராயணம் மற்றும் பிரார்த்தனை செய்யப்பட்டது.*

## சேது ரமணன்



*ஸ்ரீ சேது ரமணன் (1953-2021) பகவானின் சித்தப்பா நெல்லியப்பையர் அவர்களின் பேரன் ஆவார். அவர் கடந்த 17/5/2021 அன்று பகவான் பதமடைந்தார்.*

*நட்புடன் பழகுதல், உதவி செய்தலை குணமாகப் பெற்ற இவர் பகவான் ஜயந்தி மற்றும் ஆராதனை விழாக்களின்போது ஆச்ரமம் வந்து சேவைகளைச் செய்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.*

*சென்னையில் ஒரு அச்சகத்தில் வேலை செய்து கொண்டிருந்தார். சில காலம் ஆசிரமத்தின் தமிழ் வெளியீடுகளை அச்சிட்டுள்ளார். அன்னாரது இரு மகன்களின் உபநயனம் ஆச்ரம மோர்வி விருந்தினர் மாளிகையில் நடைபெற்றது.*

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2021

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜூலை | 23 | வெள்ளி | காலை 10.38 | 24 | சனி | காலை 8.07 |
| ஆகஸ்ட் | 21 | சனி | மாலை 7.00 | 22 | ஞாயிறு | மாலை 5.30 |
| செப்டம்பர் | 20 | திங்கள் | காலை 5.28 | 21 | செவ்வாய் | காலை 5.21 |
| அக்டோபர் | 19 | செவ்வாய் | மாலை 7.03 | 20 | புதன் | மாலை 8.26 |
| நவம்பர் | 18 | வியாழன் | நண்பகல் 12 | 19 | வெள்ளி | மதியம் 2.25 |
| டிசம்பர் | 18 | சனி | காலை 7.24 | 19 | ஞாயிறு | காலை 10.05 |

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| **மைலாப்பூர்** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | .......... | 9940418375 |
| **குரோம்பேட்டை,** ரமணாலயம் | .......... | 9444261296 |
| **கிழக்கு தாம்பரம்** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| **நங்கநல்லூர்** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| **மாம்பலம்** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| **விருகம்பாக்கம்** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| **கொளத்தூர்** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| **சூளைமேடு** திரு V. ரமணன் | .......... | 9444172623 |
| **புதுச்சேரி** ரமண கேந்திரம் | .......... | 0413-2272141 |
| **மதுரை** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| **இராமநாதபுரம்** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| **திருச்சுழி** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| **மலையாண்டிபட்டினம்** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| **பொள்ளாச்சி** ரமண குமார் | .......... | 9487016880 |
| **ஒட்டன்சத்திரம்** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| **பழனி** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| **சேலம்** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| **வந்தவாசி** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| **மடம்** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |
| **திண்டுக்கல்** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| **பூண்டி** மாரியப்பன் | .......... | 9486576687 |

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542


Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



**3/6/2021 ஸ்ரீ ரமணாஸ்ரமத்தில் நடைபெற்ற மகாபூஜை**
**மற்றும் 22/6/2021 அன்று நடைபெற்ற பசு லட்சுமி ஆராதனை**



Registered with the Registrar of Newspaper for India  RNI No.:TNTAM/2001/5542

